Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JUNE 14, 2024

வெள்ளிக்கிழமை ஜூன் 14, 2024 | ஒளி: 09 கதிர் 273 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE





## கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை
# திறப்பில் மாற்றம்

**குழப்பத்தை தீர்க்குமாறு செந்தில் தொண்டமானிடம் ஜெயசிறில் கோரிக்கை**

**இக்காலம் அறவே போதாது, அது ஒரிருநாள் முந்தி மாற்றப்படவேண்டும்**

■ *வீ.ரி.சகாதேவராஜா*

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் விழாவுக்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை திறக்கப்படும் திகதியில் மீண்டும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது இப்பாதை திறக்கப்படும் திகதி ஜூலை 2ஆம் திகதி எனக் கூறப்பட்டுள்ளது.

கதிர்காமத்தில் செவ்வாய்க்கிழமை (11) இடம்பெற்ற கூட்டத்தில் இத் திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதாவது ஜூலை 2 ஆம் திகதி திறக்கப்பட்டு 14ஆம் திகதி மூடப்படும் என்று மொனராகலை மாவட்ட அரசாங்க அதிபர் ரத்னாயக்க அறிவித்திருக்கிறார்.

இதனால் பாதயாத்திரை மேற்கொள்ளும் இந்து அடியார்கள் குழப்பமடைந்துள்ளனர்.

குறித்த நான்கு நாட்களில் காட்டைக் கடந்து கொடியேற்றத்திற்குச் செல்ல முடியாது.

சாதாரணமாக ஆறு நாட்கள் தேவை. எனவே இந்த நாட்குறைப்பு திட்டமிட்ட ஒரு சதியாகக் கூட இருக்கலாம் என கருதப்படுகிறது.

தொடர்ச்சி P2

## "நலன்புரி திட்டங்களின் பயன் கிடைக்கவேண்டும்"

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் நலன்புரித் திட்டங்களை வினைத்திறனுள்ளதாக்கி அதன் பயன்களை மக்களுக்கு துரிதமாக வழங்குவதற்கு ஆளுநர்கள் பங்களிக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மாகாண ஆளுநர்களுடன் புதன்கிழமை (12) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

மாகாண மட்டத்தில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையை விரைவாகத் தீர்க்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் உறுமய காணி உறுதி வழங்கும் திட்டத்தின் வினைத்திறன் என்பன குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

உறுமய காணி உறுதிகளை வழங்கும் வேலைத்திட்டத்தை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கு கிராம உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக மற்றுமொரு குழுவிற்கு அதிகாரத்தை வழங்கி நடமாடும் சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியத்தை ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் மக்களை ஆர்வமூட்டி, அவர்களுக்கு அந்த நன்மையை வழங்க வேண்டிய பொறுப்பு பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நினைவுகூர்ந்தார்.

மாகாண மட்டத்தில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை விரைவில் தீர்க்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகத் தெரிவித்த கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம்ஜயந்த, தேசிய ய்யப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டிய அமைச்சர், கல்வி நிர்வாக சேவை ம்.



தொடர்ச்சி P2

## தமிழர்களுக்கு நாமல் அறிவுரை

வாக்குகளைப் பெறுவதற்காக திடீரென தமது கொள்கைகளை மாற்றிக் கொள்ளும் அரசியல்வாதிகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களும் கவனத்தில் கொள்ளுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஆரம்பம் முதலே ஆதரவளித்து வரும் கட்சிகளையும் அதனை எதிர்த்த கட்சிகளையும் தமிழ் மக்கள் நம்பலாம் எனவும்,



தொடர்ச்சி P2



## பெண்களுக்கான யோகா

10ஆவது சர்வதேச யோகா தினத்தை (IDY) கொண்டாடும் 10 நாள் யோகா மஹோத்சவ் கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் வியாழக்கிழமை (13) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொழும்பில் உள்ள பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். 'பெண்கள் வலுவூட்டலுக்கான யோகா' எனும் தொனிப்பொருளின் கீழ் இந்நிகழ்வு இடம்பெற்றது.

## "சுயேச்சையாக போட்டியிடுவேன்"

தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதில் சிக்கல் ஏற்பட்டால், ஜனாதிபதி தேர்தலில் தான் சுயேச்சையாகப் போட்டியிடுவேன் என வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

"தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இம்முறை மக்கள் மத்தியிலும் பொது வேட்பாளர் விடயம் பெரிதும் பேசப்படுகிறது.

எனவே, இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவர் முன்னிறுத்தப்படுவார். அதில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால் , நான் சுயேச்சையாகப் போட்டியிடுவேன்.



தொடர்ச்சி P2

## வடக்கு இன்னும் அபிவிருத்தி காணவில்லை

யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், வடமாகாணத்தில் வாழும் மக்கள் பொருளாதார, சமூக மற்றும் வாழ்வாதாரத பரப்புகளில் சாதகமான முன்னேற்றத்தை அடையவில்லை. இது ஒரு துரதிர்ஷ்டவசமான நிலை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 233ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், யாழ்ப்பாணம், மானிப்பாய் புனித. ஹென்றியரசர் கல்லூரி இளவாலைக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு ஜூன் 11ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போது, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.



தொடர்ச்சி P2

## விண்ணப்பங்கள் ஏற்பு

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொது உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து, பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்க தகுதிபெற்றவர்கள், தங்களுடைய விண்ணப்பங்களை வெள்ளிக்கிழமை (14) முதல் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் ஒன்லைன் முறையின் ஊடாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ugc.ac.lk என்ற இணையத்தளத்திற்குச் சென்று விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

ஜூலை 15ஆம் திகதியுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

## யாழ். ஊடகவியலாளர் வீட்டின் மீது தாக்குதல்



■ *நிதர்ஷன் வினோத்*

யாழ்ப்பாணம் - அச்சுவேலியில் உள்ள ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாத நபர்கள், வீட்டின் மீது தாக்குதல் நடத்தியதுடன், உடைமைகளுக்கும் தீ வைத்து வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவம் வியாழக்கிழமை (13) அதிகாலை 12.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அச்சுவேலி, பத்தமேனி காளி கோவில் பகுதியில் உள்ள ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டு, உடைமைகளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## இந்தியாவிலிருந்து இலங்கைக்கு
# கடத்தவிருந்த இஞ்சி மீட்பு



இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 60 இஞ்சி மூடைகளைத் தமிழக சுங்கத்துறை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். இஞ்சி மூடைகளைப் பதுக்கி வைத்திருந்த வீட்டின் உரிமையாளர் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இலங்கைக்கு மண்டபம் அடுத்துள்ள மரைக்காயர் பட்டினம் கடற்கரையிலிருந்து இஞ்சி நாட்டுப் படகில் கடத்த இருப்பதாகத் தமிழகத்தில் மண்டபம் சுங்கத் துறை அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையில் மரைக்காயர்பட்டிணம் கடற்கரை ஓரம் உள்ள வீடுகள் மற்றும் மீன் வைக்கும் கம்பெனி உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து புதன்கிழமை (12) இரவு அதிரடி சோதனை நடத்தியுள்ளனர்.

தொடர்ச்சி P2



## ஊழியர்களின் சுகயீனத்தால் தபால் பொதிகள் தேங்கின

■ *ஆ.ரமேஸ்*

நாடளாவிய ரீதியில் ஒன்றிணைந்த அஞ்சல் ஊழியர் சங்கத்தினர் சுகயீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வியாழக்கிழமை (13) நள்ளிரவு வரை தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

"தபால் நிலையங்களைப் பாதுகாக்கவும்", "தபால் ஊழியர்களின் உரிமைகளை வென்றெடுக்கவும்", உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன் வைத்து தபால் ஊழியர்கள் சுகயீன விடுமுறை அடையாள பணிபுறக்கணிப்பில் ஈடுப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# திறப்பில் மாற்றம்

அந்தக் காலத்தில் இப் புனித யாத்திரை பக்தி பூர்வமாகக் கொடியேற்றத்திற்கு பத்து நாட்களுக்கு முன்னரே திறக்கப்பட்டு எந்த அன்னதானமோ நீர் விநியோகமோ இல்லாது சிறப்பாக இடம்பெற்று வந்திருக்கிறது. சுமார் 20 நாட்கள் காட்டுப் பாதை திறந்திருக்கும்.

ஆனால் தற்போது செலவைக் பொறுத்துத் திறக்கப்படும் நாட்கள் தீர்மானிக்கப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலை அதுவும் மொனராகலையில் ஒரு திகதி அம்பாறையில் ஒரு திகதி. இதற்காக லாகுகலை பிரதேச செயலகம் நிதி சேகரிக்கின்றது . நீர் வழங்கலுக்காக இன்னும் சில தொண்டு அமைப்புகளும் நிதி சேகரிக்கின்றன. என்ன நடக்கிறது என்பது மக்களுக்குத் தெரியாமல் உள்ளது. “கூட நாட்கள் திறந்தால் செலவு அதிகம். நாங்கள் மூன்று நாட்களில் சென்றிருக்கிறோம்” என்று கதிர்காமக் கூட்டத்தில் ஓர் அதிகாரி தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

மொத்தத்தில் இம்முறை இவ்வாறாக முரண்பாடு ஏற்பட்டுள்ளமை எதிர்காலத்தில் இப் பாதயாத்திரையை முடக்கும் செயற்பாடாக இருக்கலாமோ என இந்துக்கள் அச்சப் படுகின்றனர்.

ஏலவே, இத் திகதி ஜூலை 1ஆம் திகதி என மொனராகலையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. பின்னர் லாகுகல பிரதேச செயலகத்தினால் அது ஜூலை 2ஆம் திகதி என உகந்தைக் கூட்டத்தில் கூறப்பட்டது.

இதனை காரைதீவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் சபையில் எழுந்து “இக்காலம் அறவே போதாது. அது ஒரிருநாள் முந்தி மாற்றப்படவேண்டும். யாத்திரீகர்களின் நலன்கள் கட்டாயம் பேணப்பட வேண்டும்” என கோரிக்கை விடுத்ததன் பலனாக இத் திகதி இம்மாதம் 30ஆம் திகதி என மாற்றப்பட்டமை தெரிந்ததே.

உகந்தை மற்றும் கதிர்காமம் முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜூலை 06ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை மாதம் 22ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.

2000ஆம் ஆண்டுகளுக்கு முன்பு அகஸ்தியர் புலஸ்தியர் போகர் உங்க பல சித்தர்கள் முனிவர்களால் மேற்கொள்ளப்பட்ட பாதயாத்திரை இன்று பல ஆயிரக்கணக்கான மக்களால் தொடரப்பட்டு வருகின்றது.

கதிர்காம காட்டுப் பாதை மொத்தம் 56 மைல்கள் ஆகும்.

உகந்தையிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் வாகூரவட்டை.

பின்பு 7 மைல் தூரத்தில் குமுக்கனாறு. 12 மைல் தூரத்தில் நாவலடி. பின்னர் 11 மைல் தூரத்தில் வியாழை.

6 மைல் தூரத்தில் வள்ளி அம்மன் ஆறு.

8 மைல் தூரத்தில் கட்டகாமம். அடுத்து 8 மைல் தூரத்தில் கதிர்காமம் மொத்தமாகக் காட்டுப்பாதை 56 மைல்களை உள்ளடக்கியது. சாதாரணமாக

சுமார் 6 நாட்கள் இந்த காட்டுப் பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை.

கதிர்காமக் காட்டுப்பாதை திறப்பு தினக் குழப்பத்தைத் தீர்த்து வைக்குமாறு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோரிடம் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் சமய ஆர்வலருமான கி.ஜெயசிறில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# யாழ். ஊடகவியலாளர் வீட்டின் மீது தாக்குதல்

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்து பேர் கொண்ட வன்முறைக்கும்பலே குறித்த வன்முறையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதன்போது வீட்டிற்கு வெளியே இருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டி உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆயுதங்களால் தாக்கப்பட்டதுடன், தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

“திருநங்கைகளின் உணர்வுகளைத் தவறாக சித்தரிக்காதே” என அச்சடிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் தாக்குதல் நடத்தப்பட்டுள்ள வீட்டில் போடப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கான காரணம் தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# கடத்தவிருந்த இஞ்சி மீட்பு

அப்போது மரைக்காயர்பட்டிணம் கடற்கரை ஓரமாக உள்ள வீடொன்றின் பின்புறம் இருந்து 60 மூடைகளில் சுமார் 2 தொன் எடை கொண்ட இஞ்சி கைப்பற்றப்பட்டுள்ளது. இதையடுத்து, இஞ்சி மூடைகளை மண்டபம் சுங்கத்துறை அதிகாரிகள் அலுவலகம் எடுத்து வந்த அந்த வீட்டின் உரிமையாளர் யார் என்பது குறித்து விசாரித்து வருகின்றனர்.

மேலும், முதல் கட்ட விசாரணையில் இஞ்சி கடல் வழியாக இலங்கைக்குக் கடத்த இருந்தது தெரியவந்துள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட இஞ்சியின் இந்திய ரூபாய் மதிப்பு சுமார் 3 இலட்சம் இருக்கலாம் என சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து இஞ்சி கடல் வழியாக இலங்கைக்குக் கடத்தப்பட இருந்த போது கைப்பற்றப்பட்டது இதுவே முதல் முறை எனவும் சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# “நலன்புரி திட்டங்களின் பயன் கிடைக்கவேண்டும்”

பாடசாலைகளுக்கு 2,500 புதிய ஆசிரியர் நியமனங்களை ஜூலை 03ஆம் திகதி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதன் படி, இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல், கணிதம், தொழில்நுட்பம், சர்வதேச மொழிகள் ஆகிய பாடங்களுக்கு 2,100 ஆசிரியர் நியமனங்களையும், 2021ஆம் ஆண்டு நடைபெற்ற ஆங்கில மொழிமூல உயர் டிப்ளோமா பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 500 ஆசிரியர்களை நியமிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன் மூலம் தேசிய பாடசாலைகளில் குறித்த பாடங்களுடன் தொடர்புடைய ஆசிரியர் வெற்றிடங்கள் பெருமளவில் நீங்கும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார். அத்துடன், ஆங்கில மொழிமூல ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் தற்போது ஓய்வு பெற்ற ஆங்கில மொழிமூல ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டிய அமைச்சர், கல்வி நிர்வாக சேவை மற்றும் ஆசிரியர் கல்விச் சேவை ஆகியவற்றில் உள்ள உத்தியோகத்தர் பற்றாக்குறையை ஈடுசெய்யும் வகையில் துரித வேலைத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்காக ஜனாதிபதி நிதியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்தைத் துரிதப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

முதலாம் தரம் முதல் 11ஆம் தரம் வரை கல்வி கற்கும் ஒரு இலட்சம் மாணவர்களுக்கான ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் மேல் மாகாணத்திற்கு 16,152 புலமைப்பரிசில்களும், வடமாகாணத்திற்கு 8,636 புலமைப்பரிசில்களும், ஏனைய மாகாணங்களுக்கு 10,000 புலமைப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாகவும் இங்குச் சுட்டிக்காட்டப்பட்டது. புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ், ஒரு மாதத்திற்கு ரூ.3,000/- வீதம் 12 மாதங்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

மேலும்,க.பொ.த உயர்தரம் கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு மாதம் 6,000 ரூபா வீதம் 24 மாதங்கள் புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் பணிகள் தற்போது நிறைவுபெற்றுள்ளதாகவும், கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 2,000 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஜூன் 19ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் அலரி மாளிகையில் நடைபெறவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது.

அதற்கு இணையாக, மாவட்ட மட்டத்தில் புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுவதுடன் புலமைப்பரிசில் வழங்கும் தினத்திலேயே, நிலுவைத் தவணையுடன் உரிய பணம் மாணவர்களின் கணக்கில் வரவு வைக்கப்படும். அதன்பின், ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில், online முறையில் மாணவர்களின் கணக்கில் உரிய புலமைப்பரிசில் தொகை நேரடியாக வரவு வைக்கப்படும்.

வரலாற்றில் முதன்முறையாகப் பிரிவெனா, சில்மாதா கல்வி நிலையங்களில் பயிலும் பிக்குமார், பிக்குணிகள் , மற்றும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்கள் கோரல் முடிவடைந்ததையடுத்து புலமைப்பரிசில்கள் வழங்கும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்படும். க.பொ.த உயர் தரத்தில் தகவல் தொடர்பாடல், தொழில்நுட்பம் பாடம் கற்கும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரும் நடவடிக்கை ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இங்குக் குறிப்பிடப்பட்டது.

இந்த அனைத்து புலமைப்பரிசில் கொடுப்பனவுகளுக்காகவும் வருடமொன்றுக்கு 5100 மில்லியன் ரூபா செலவிடப்படுவதாகவும், அதற்கான முழுத் தொகையும் ஜனாதிபதி நிதியத்திலிருந்து ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த புலமைப்பரிசில் திட்டங்களை மாவட்ட மட்டத்தில் வெற்றியடையச் செய்வதில் ஆளுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

பிரதமர் தினேஷ் குணவர்தன, தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.



# ஊழியர்களின் சுகயீனத்தால் தபால் பொதிகள் தேங்கின

அதேநேரத்தில், நுவரெலியா தபால் நிலையத்திற்கு வருகை தரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் நன்மை கருதி முத்திரை வழங்கும் பிரிவு மற்றும் பதிவு தபால் பாரம் ஏற்கும் பிரிவு மாத்திரம் இயங்குகியது.

இதற்கென மூன்று அதிகாரிகள் மாத்திரம் கடமையில் ஈடுப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# “சுயேச்சையாக போட்டியிடுவேன்”

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (09) இடம்பெற்ற மக்கள் மன்றம் நிகழ்வில் சிவில் சமூகத்திற்கு மக்கள் ஆணையில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அது தவறானது. மக்கள் தங்கள் பிரதிநிதியாகவே பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்துள்ளனர்.

ஆனாலும் மக்கள் தமக்கானதை தாமே தெரிவு செய்வார்கள்.

அவ்வாறு மக்களால் உருவானதே சிவில் சமூகம். அவர்களும், தமக்கு என்ன தேவை என்பதனை தீர்மானிக்க, சொல்ல முடியும்” எனவும் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

## சேனையூர் நெல்லிக்குளம் மலை

# 10 பேர் கைதாகி பிணையில் விடுவிப்பு



அ.அச்சுதன்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு, சேனையூர் கிராம சேவகர் பிரிவில் உள்ள நெல்லிக்குளம் மலைத் தொடரின் பாறைகளை உடைப்பதற்கு சனிக்கிழமை (08) பாறை உடைப்பு இயந்திரத்துடன் உடைப்பு வேலைகளை ஆரம்பிக்க முயன்ற போது அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் உடைப்பு வேலைகள் நிறுத்தப்பட்டன.

ஆனால் செவ்வாய்க்கிழமை (11) காலை 9.45 மணிக்கு மீண்டும் மலை உடைப்பு வேலைகளை ஆரம்பித்த போது மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர் பாறை உடைப்பு இயந்திரம் வேலைகளை ஆரம்பித்த போது அப்பகுதிக்கு அப்பகுதி மக்கள் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன் போது 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை சட்டக் கோவை 81 கீழ், சமாதான குழவை ஏற்படுத்தக் கூடிய செயல் ஒன்றைச் செய்த அடிப்படையில் சம்பூர் பொலிஸார் 10 பேரை செவ்வாய்க்கிழமை (11) கைது செய்து பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.

விடுவிக்கப்பட்ட 10 பேரும் மூதூர் நீதிமன்றில் இன்று புதன்கிழமை(12) மதியம் 12.20 மணிக்கு ஆஜராகினர். நீதிமன்றமானது, இன்று இவர்கள் அனைவரையும் சொந்தப் பிணையில் விடுவித்ததோடு, குறித்த பிரதேசத்தை இம்மாதம் 15ஆம் திகதியன்று நீதிவான் பார்வையிடுவதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.

10 பேருக்கும் சார்பாக சட்டத்தரணிகளான பு.முகுந்தன், ந.மோகன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

# தமிழர்களுக்கு...

ஆனால், தேர்தலுக்குச் சற்று முன்னர் தமது கொள்கைகளை மாற்றிக்கொள்பவர்கள் தேர்தல் கலரியில் விளையாடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு ஆதரவளித்த அதே அரசியல் கட்சிகள் தற்போது மாறிவிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுவும் இந்தக் கட்சிகளின் இரட்டை வேடத்திற்குச் சான்றாகும்.' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# காட்சி பெட்டி இன்றி கொழும்புவந்த ரயில்

பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த பயணிகள் ரயிலில் பெட்டியொன்று தடம் புரண்டதால் மலையகத்துக்கான ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.



வியாழக்கிழமை (13) மாலை 3.40 மணியளவில் பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த பயணிகள் புகையிரதத்தின் காட்சிப் பெட்டி தடம்புரண்டதால் மலையக புகையிரத போக்குவரத்து தடைப்பட்டதாக நாவலப்பிட்டி புகையிரத கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

வட்டகொட மற்றும் தலவாக்கலை நிலையங்களுக்கு இடையில் 118ஆவது மைல் கம்பத்திற்கு அருகில் ரயில் தடம் புரண்டுள்ளதாகவும், தடம் புரண்ட ரயிலில் காட்சி பெட்டியை அகற்றி மற்றைய பெட்டிகளுடன் கொழும்பு கோட்டை வரை ரயிலை இயக்குவதற்கு ரயில் கட்டுப்பாட்டு அறை நடவடிக்கை எடுத்துள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

# வடக்கு இன்னும் அபிவிருத்தி காணவில்லை

வடமாகாணத்தில் மக்களை மையப்படுத்திய பாரிய அபிவிருத்தியொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கருதுகிறது. இது மக்களை முன்னிலைப்படுத்திய பங்கேற்பு அபிவிருத்தியின் ஒரு வடிவமாக அமைந்து காணப்படும். இதன் மூலம் கிராமத்தைக் கட்டியெழுப்பி, நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்குப் பக்க பலம் கிடைக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் இங்குக் குறிப்பிட்டார்.

இதற்கு, அறிவு சார்ந்த பொருளாதாரம், ஏற்றுமதி அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சியை நோக்கி நகர வேண்டும். தகவல் தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்தத் தேசிய வேலைத்திட்டமொன்றின் தேவைப்பாடு நாட்டில் இன்று எழுந்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கைத்தொழில் பூங்காக்களை அமைத்து, அபிவிருத்தியை நடைமுறை ரீதியாக முன்னெடுப்போம். இதுவே ஐக்கிய மக்கள் சக்தியின் கனவாகும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.



PRAGMATIC

SDB – ESG புத்தாக்க நிலைபேண்

# நிதியிடலுக்கு அர்ப்பணிப்பு

இலங்கை வங்கித் துறையின் இயங்கு தளத்தில், அதனது மூலோபாய தூரநோக்கினில் நிலைபேண் தன்மையை முன்னிறுத்தி முன்னோக்கிய சிந்தனை, பெறுமதிகளினால்

செலுத்தப்படும் அறங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக ஒரு வினையூக்கியாக SDB வங்கி தோற்றம்பெற்றுள்ளது.

சமீபத்திய வருடங்களாக, பரந்த வீச்சில் பயனுறு நிகழ்ச்சித் திட்டங்களினை நிகழ்த்தி ESG (சுற்றுச்சூழல், சமூகம், மற்றும் ஆட்சி) துவக்கங்களில் அதிசிறப்பான பயணத்தினை மேற்கொண்டுள்ளது.

SMEகளிற்கு ஆதரவளித்தல் மற்றும் பெண்களை வலுவூட்டல் முதலாக நிதி மற்றும் எண்ணிய உள்ளடக்கல் வரையில் சமூக, பொருளாதார, மற்றும் சுற்றுச்சூழல் முன்னரங்குகளில் மேன்மைக்கான உன்னத புகழைப் பெற்றுள்ளது.

தேவஹந்திய கிழக்கு கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட முற்றுமுழுதான சூழல் புனரமைப்பானது சுற்றுச்சூழல் நிலைபேண் தன்மையில் ஒரு தனித்துவமான அடைவாக காணப்படுகின்றது. 25

ஹெக்டேயரினை கொண்ட தரிசு நிலத்தினில், இத்துவக்கமானது அந்நிலத்தினை மறுசீரமைத்தது மாத்திரமின்றி, மாமிசத்திற்கான மாற்று உணவுகள் மற்றும் மூலிகை நல்லுணவுகள் என்பவற்றின் பயிரிடலின் ஊடாக 90இற்கும் மேற்பட்ட குடும்பங்களிற்கு

மாற்று வருவாய்க்கான மூலத்தையும் வழங்கியுள்ளது.

SDB வங்கியின் 25 ஆண்டு விழா கொண்டாட்டத்தினில் அறிமுகப்படுத்தப்பட்ட, இப்புதுமையான முயற்சியானது வங்கியின் முழுதளாவிய இலக்கினை சாராம்சப்படுத்துவதாக, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார நிலைபேண்தன்மைகளுடன் தடையற பிணைந்துள்ளது.

புதுப்பிக்கத்தக்க சக்தி யுகத்தில், பசுமை எதிர்காலத்தினை நோக்கி இலங்கையை உந்துவதிலான துடிப்பானவொரு வகிபாகத்தினை SDB வங்கி வகிக்கின்றது. பல்வேறு சூரியசக்தி கருத்திட்டங்களிற்கு நிதிவழங்க வங்கியை இயலுமையாக்கிய சூரிய சக்தி துறைத் தலைவர்களுடனான மூலோபாய பங்குடைமையானது, தேசத்தின் புதுப்பிக்கத்தக்க சக்தி இலக்குகளை நோக்கி குறிப்பிடத்தக்கவகையில் முன்னேற வழி நடத்துகின்றது.

களுத்துறை மற்றும் ஹொரணையிலான அதன் செயற்பாட்டு நிறுவல்களுடனான, தனது கிளை வலையமைப்புக்களில் சூரிய சக்தியினை நோக்கியதான வங்கியின் மாற்றமானது 2030ஆம் ஆண்டளவிலான நிலைபேண் உட்கட்டுமான இலக்கிற்கான அர்ப்பணிப்பாக காணப்படுகின்றது.

இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர சுயதொழில் முனைவோர் வங்கியியல் கிடைப்பரப்பில் ஒரு முன்னணி நாயகனாக, SDB வங்கியானது சுயதொழில் வாண்மைகளை வளர்ப்பதிலும்

> “செலுத்தப்படும் அறங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக ஒரு வினையூக்கியாக SDB வங்கி தோற்றம்பெற்றுள்ளது

பொருளாதார வளர்ச்சியை பேணுவதிலும் ஸ்திரமானதான காணப்படுகின்றது.

நிதி அறிவு மற்றும் எண்ணிய உள்ளடக்கல் துவக்கங்கள் போன்ற முக்கிய வளங்களை வழங்கி, நிதி உதவிகளிற்கு அப்பால் பெண் சுயதொழில் வாண்மையாளர்களிற்கு ஆதரவளிப்பதிலான வங்கியின் அவதானமானது விசேடமாக குறிப்பிடத்தக்கவொன்றாக காணப்படுகின்றது.

வர்த்தகத்தில் பெண்களை வலுப்படுத்துவதன் வாயிலாக, SDB வங்கியானது உள்ளடக்கிய வளர்ச்சியை முற்செலுத்துவதுடன் மேலும் சமத்துவமானதொரு சமூகத்தினையும் பேணுகின்றது.

கூட்டுத்தாபனத் துறைகளுடனான ஆழப்பிணைந்த உறவுகளுடன், பல்வேறு துவக்கங்களின் ஊடாக கூட்டுறவு மற்றும் வலுப்படுத்தல்களை SDB வங்கி பேணுவதானது உள்ளடக்கிய

வளர்ச்சியை தொடர்ச்சியாக முற்செலுத்துகின்றது. அதன் சமுதாய பங்கேற்பு நிகழ்ச்சித்திட்டங்களானவை சமூக ஒத்திசைவினை பேணும் அதேசமயத்தில் சமுதாயங்களை உயர்த்தி ஆதரவளிக்கவும் செய்கின்றன.

2023ஆம் அண்டில் மாத்திரம், நிதி அறிவினை வளப்படுத்தல் மற்றும் அடிப்படை திறன்களை வழங்குதலை நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களின் வாயிலாக 3,200இற்கும் மேற்பட்ட தனிநபர்களினை வங்கி வலுவூட்டியுள்ளது.

எதிர்கால நோக்கமும் சமூக பொறுப்புணர்வும் கொண்டவொரு நிதி நிறுவனமாக, SDB வங்கியானது அதனது நிதிவழங்கள் கொள்கைகளிலான குறிப்பிடத்தக்க முன்னேற்றம் மற்றும்

நிலையான அர்ப்பணிப்பு என்பவற்றினால் உருவாக்கப்பட்டுள்ள தனது பயணத்தில் அதனை பிரதிபலிக்கின்றது.

நிலைபேண் துவக்கங்களில் முன்னோடியாக விளங்கல் முதற்கொண்டு சுயதொழில் வாண்மையாளர்களையும் சமுதாயங்களையும் வலுப்படுத்துல் வரையில் SDB வங்கியானது நேர்க்கணிய மாற்றங்களை முற்செலுத்துவதிலும் நிலைபேண் அபிவிருத்திகளை பேணுவதிலுமான அதன் பணிக்கூறில் திடமாக காணப்படுகின்றது. முன்னோக்கி பார்க்கையில், வங்கியானது மிகவும் நிலைபேறானதும் செழிப்பானதுமாக இலங்கையை

அபிவிருத்தி செய்வதற்கான தன்னுடைய அர்ப்பணிப்பினை மீள உறுதிப்படுத்தியுள்ளது.

சம்பள முரண்பாட்டை தீர்க்கக் கோரி

# ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

எம்.யூ.எம்.சனூன்



சம்பள முரண்பாட்டை தீர்க்க கோரி ஆசிரியர்கள், அதிபர்களால் புத்தளம் பேருந்து நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்ட பேரணியொன்று புதன்கிழமை (12) முன்னெடுக்கப்பட்டது.


பாடசாலை கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்து விட்டு வீதிக்கு இறங்கிய ஆசிரியர்கள், அதிபர்கள் தமது கோரிக்கைகளை முன்வைக்கும் பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிள்ளைகளின் கல்வி உரிமையைப் பாதுகாத்தல், பெற்றோர்களின் கல்விக்கான பொருளாதார சுமையைக் குறைத்தல், இலவச கல்வியைத் தனியார் மயமாக்கல், அதிபர், ஆசிரியர், ஆசிரியர் ஆலோசகர்களின் நிலுவைச் சம்பளம் என்பவைகளின் கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தின் போது முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாடு மற்றும் பல கோரிக்கைகளை உடனடியாக வழங்குமாறு கோரி நுவரெலியா மாவட்ட ஆசிரியர், அதிபர்கள் ஹட்டன், நுவரெலியா, ரிக்கில்லகஸ்கட மற்றும் ராகலை ஆகிய நகரங்களில் ஆர்ப்பாட்டத்தில் புதன்கிழமை(12) ஈடுபட்டுள்ளனர்.

ஆசிரியர், முதல்வர் சம்பளத்தில் மூன்றில் இரண்டு பங்கு வழங்க வேண்டும், பள்ளி பராமரிப்பு பணியை பெற்றோரிடம் இருந்து நீக்க வேண்டும், கல்விக்கு 6 சதவீத ஒதுக்கீட்டை வழங்க வேண்டும், கல்வி விற்பனையை உடனடியாக நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி ஆசிரியர்கள், முதல்வர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.





## வாகன விபத்தில் இளைஞன் படுகாயம்

பதுளை - பசறை வீதியில், ஊவா பல்கலைக்கழகத்திற்கு அருகில் வியாழக்கிழமை (13) நண்பகல் 12.30 மணியளவில் கார் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தவறான திசையில் பயணித்த கார், மோட்டார் சைக்கிள் மீது மோதியே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சுமார் 15 அடி தூரம் வீசப்பட்டுக் காயமடைந்துள்ளார். அவரது காலில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

மேலும், காரின் சாரதியை கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

## இளம் மருத்துவர் சடலமாக மீட்பு




பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் விடுதியில் தங்கியிருந்த பெண்ணியல் நோய் வைத்தியர் ஒருவர் வியாழக்கிழமை (12) பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பெண்ணியல் நோய் மருத்துவராக அவர் கடமை புரிந்து வரும் திருநெல்வேலியைச் சேர்ந்த பிரேமானந்தராசா கிருஷ்ணானந்தா (வயது- 30) என்ற வைத்தியரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடும் மன அழுத்தம் காரணமாக அதிகளவான மயக்க மருந்தை உடலில் செலுத்தியமையே அவரது மரணத்தினுக்குக் காரணம் என பிரேதப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

## “காணொளி வேண்டாம்” சஜித்தின் பாதுகாவலர்கள் மிரட்டல்



பு.கஜிந்தன்

“புகைப்படம் மற்றும் காணொளி எடுக்க வேண்டாம்” என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் பாதுகாவலர்கள் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தியுள்ளனர்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச புதன்கிழமை(12) சுழிபுரம்-விக்டோரியா கல்லூரிக்குப் பேருந்து ஒன்றினை வழங்கியுள்ளார்.

பேருந்துக்கு வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து சஜித் பிரேமதாச பேருந்தில் அமர்ந்து அதனைச் செலுத்துவதற்கு தயாராகும் போது, ஊடகவியலாளர்கள் அதனைக் காணொளி மற்றும் புகைப்படம் எடுத்துள்ளனர்.

உடனே அங்கிருந்த சஜித்தின் பாதுகாவலர்கள் ஊடகவியலாளர்களின் கேமராவினை கையால் தட்டி விட்டு “புகைப்படம் மற்றும் காணொளி எடுக்க வேண்டாம்” என அச்சுறுத்தியுள்ளனர். இதனால் அங்கு சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

வெள்ளவத்தை விபத்தில்

## நிந்தவூரைச் சேர்ந்தவர் பலி

வெள்ளவத்தை கரையோர வீதியில் சென்று கொண்டிருந்த வேன் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிந்தவூர் ஆலிம் வீதியைச் சேர்ந்த பி.எல்.இலானி என்ற 29 வயதுடைய நபரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

தெஹிவளையில் இருந்து பம்பலப்பிட்டி நோக்கிச் சென்ற வேன், முன்னால் சென்ற வாகனத்தை முந்திச் செல்வதற்காக எதிர்த்திசையில் சென்ற மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கரையோர வீதியின் நடுவே, பெரும்பாலான சாரதிகள் தமது வாகனங்களை எதிர்த்திசையில் செலுத்துவதை அவதானிக்காமல் செல்வதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## ஏணியில் ஏறி மிளகு பறித்தவர் மரணம்

பிபில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பதுள்ளகம்மன பிரதேசத்தில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் மிளகு பறித்துக்கொண்டிருக்கும் போது தவறி விழுந்து உயிரிழந்துள்ள சம்பவம் செவ்வாய்க்கிழமை (11) இடம்பெற்றுள்ளது.

பிபில பதுள்ளகம்மன பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய டி.எம்.விமலசிறி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர், மரமொன்றிலிருந்த மிளகு கொடியிலிருந்து ஏணியில் ஏறி நின்றவாறு மிளகு பறித்துக்கொண்டிருந்த போது ஏணி கவிழ்ந்ததில் கீழே விழுந்து காயமடைந்துள்ளார். பிபில ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளார்.

## அமித் ஷாவை சந்தித்தார் செந்தில்

இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, சுகாதார, இரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சர் மற்றும் பா.ஜ.கவின் தேசிய தலைவர் ஜே.பி.நட்டா ஆகியோரை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் விஜயவாடாவில் சந்தித்துள்ளார்.

இதன்போது, இந்தியத் தேர்தல்களின் சமீபத்திய வெற்றி மற்றும் அவர்களின் மும்முறை தொடர்ச்சியாக ஆட்சிக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கைக்கு அவர்கள் தொடர்ந்து அளித்து வரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்ததோடு, இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.



மேலும், பொருளாதார அபிவிருத்தி தொடர்பான இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்தும் கலந்துரையாடல் மேற்கொண்டுள்ளதுடன், இலங்கையில் பெருந்தோட்ட சமூகத்தின் 200ஆவது ஆண்டு நினைவு முத்திரையையும் விஜயவாடா நகரில் வைத்து அவர்களுக்கு வழங்கி வைத்துள்ளார்.

## தீப்பெட்டி தொழிலில் ஈடுபடுவோர் ஆர்ப்பாட்டம்

மொஹொமட் ஆஸிக்

வெளிநாடுகளில் இருந்து லைட்டர்கள் இறக்குமதி செய்வதால், உள்ளூர் தீப்பெட்டி தொழிலில் ஈடுபட்டு வரும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிப்புக்குள்ளாகி உள்ளதால் தமது தொழிலைப் பாதுகாத்துத் தருமாறு கோரி தீப்பெட்டி தொழிலாளர்கள், கண்டி ஜோர்ஜ் ஈ.டி.சில்வா பூங்காவிற்கு முன்பாக வியாழக்கிழமை(13) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் உள்ளூர் கைத் தொழிலாக உயர் மட்டத்தில் இருந்த தீப்பெட்டி தொழில் தற்போது வீழ்ச்சியடைந்து ஒரு சில தொழிற்சாலைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தொழிலை நேரடியாக நம்பி 5,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருப்பதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர். தமது தொழிலைப் பாதுகாத்துத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# சிறுவர் தடுப்பு நிலைய சிறுமிகள் பாலியலுக்காக விற்கும் துயரம்

சமூக விழுமியங்கள் தீவிரமாக நழுவிக்கொண்டிருக்கும் சபிக்கப்பட்ட யுகத்தில் நாம் நுழைகிறோம். அல்லது அந்த யுகத்தின் விடியல் முடுக்கி விட்டது. அதைத்தான் ஒன்றன்பின் ஒன்றாகப் பதிவாகும் சம்பவங்கள் கூறுகின்றன. இவ்வாறான சம்பவங்களை பார்க்குமிடத்து, பாதுகாப்பு எங்கு இருக்கிறது என்ற கேள்வி எழும்புகின்றது.

நன்னடத்தை திணைக்களத்திற்குட்பட்ட கண்டி பிரதேசத்தில் உள்ள சிறுவர் தடுப்பு நிலையமொன்றின் பாதுகாவலர், அங்குத் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறுமிகளை பாலியல் தேவைகளுக்காக பல்வேறு நபர்களுக்குப் பணத்திற்கு விற்றுள்ளார்.

உங்கள் மூச்சை மீண்டும் அடக்க முடியாமல் திகைத்து இருக்கலாம். இரத்தத்திலும் கண்ணீரிலும் எழுதப்பட்ட அந்தப் பெண்களின் தலைவிதியைப் பற்றிச் சிந்தித்து. நம் குழந்தைகள் இந்த பூமியில் ஆதரவற்றவர்களாக இருக்க வேண்டுமா? உலகிற்கு எந்தத் தவறும் செய்யாத அப்பாவிச் சிறுமிகள் இவ்வாறான அவமானகரமான வரவேற்பைப் பெறுவதற்குக் காரணம் என்ன?

குழந்தைகள் பல்வேறு காரணங்களுக்காகச் சோதனையில் வைக்கப்படுகிறார்கள். பெற்றோரின் அன்பும் அக்கறையும் இல்லாமை, பெற்றோரின் நிழலில் குழந்தையை வைத்திருப்பது, குழந்தையின் பாதுகாப்பின்மைக்கு முக்கியக் காரணம். குழந்தைகளின் செயல்பாடுகளும் ஒரு காரணமாகும் காரணம் எதுவாக இருந்தாலும் தடுப்புக்காவல் குழந்தைக்கு பாதுகாப்பான இடமாக இருக்க வேண்டும்.

இந்நாட்டில் உள்ள சிறுவர் தடுப்பு நிலையங்களில் அரசாங்கத்திற்குச் சொந்தமான மற்றும் நன்னடத்தை திணைக்களத்தின் மேற்பார்வையில் இயங்கும் சிறுவர் தடுப்பு நிலையங்கள் மகத்தானவை.

இவை அரசு அதிகாரிகள் மற்றும் அதிகாரிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அவர்களுக்கு அரசால் ஊதியம் வழங்கப்படுகிறது. அப்படிப்பட்ட அதிகாரி தனது மேற்பார்வையில் உள்ள சிறுமிகளைப் பணத்திற்காக பல்வேறு நபர்களுக்கு விற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கண்டியில் உள்ள சிறுவர் தடுப்பு நிலையத்தில் சுமார் 30 சிறுமிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், சிறுமிகள் பணத்திற்கு விற்கப்பட்ட பின்னர், அதே தடுப்பு முகாமில் சிறுமிகளைத் துஷ்பிரயோகம் செய்ய வசதிகள் செய்து கொடுக்கப்படுவதாகவும் அறியமுடிகின்றது.

தடுப்பு நிலையத்தில் வசிக்கும் 17 வயதுடைய யுவதியொருவர் செய்த முறைப்பாட்டுடன் இந்த சபிக்கப்பட்ட கடத்தல் தொடர்பான தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. புகாரின் பேரில் விசாரணையைத் தொடங்கிய பொலிஸார் கடந்த ஏப்ரல் மாதம் சிறுமிகளில் ஒருவரை ஆறு ஆண்களுக்குப் பணத்திற்கு விற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் சிறுவர் தடுப்பு நிலையங்கள் நரகத்திலிருந்து வேறுபட்டவை அல்ல. இதனால்தான் அந்த நிலையங்களில் இருந்து சிறுமிகள் பலரும் தப்பியோடுகின்றனர். அவ்வாறு தப்பியோடிய சிறுமிகள் இன்றும் மீட்கப்படவில்லை.

மனிதாபிமானத்தின் ஆதரவற்ற நிலையைத் தழுவிக்கொண்டிருக்கும் அப்பாவிச் சிறுமிகளின் உயிரோடு விளையாடுபவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு எதிராகச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும். ஏனென்றால் அந்த சிறுமிகளுக்கு நீதி கிடைக்க வேறு வழியில்லை.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

வாழ்வியல் தரிசனம்

வேண்டப்பட்டவர்களுக்காக வேண்டப்படும் உண்மைகளை மறைக்கக்கூடாது. இன்றைய உலகத்தில் தமக்குப் பிடித்தவர்களுக்காக நீதிக்குப் புறம்பானவற்றைத் தாராளமாக்கச் செய்து வருகின்றார்கள்.

உண்மையை மறைப்பது எதிர்வினையை உண்டாக்கும். ஆனால், சத்தியத்திற்குச் சாவில்லை. மறைந்து நின்று அதன் வலிமையைக் காட்டும்.

உலகம் பெற்றுவரும் அனுகூலங்களை, மனிதன் மறைமுகமாகத் திருடுகின்றான். பல தடவைகள் கஷ்டப்பட்டு இயற்கை வளத்தைப் பெருக்காமல், மிகச் சுலபமாக அதில் கைவைத்து சுய லாபங்களுக்காக அழிக்க முற்படுகின்றான்.

இது எதிர்கால வாரிசுகளுக்குச் செய்யும் துரோகமுமாகும். நீர் நிலைகளில் வீடு கட்டுதல், மகா பாவம். இது நீர்வளம் பெருகுவதைத் தடுக்கும் செயலாகும்.

அடாத செயல்களை அழிப்பது தவறானது எனும் கருத்தை உதறிச் செயல்படுவது சுயநலத்தின் கோர்வையாக வளர்ந்துவிட்டது.

உண்மை நிலைகளை மறந்து கிடைப்பதைச் சுருட்டுவதே பெரும் இலாபம் எனக் கருதும் நிலை உருவாகிவிட்டது. அறம் என்பது உண்மையின் வடிவத்தில் ஒன்று. அறவழியே நிரந்த அமைதி.

- பருத்தியூர் பால.வயிரவநாதன்

## போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 3

# போருக்குப் பின்னரான ஜனநாயகம்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

போருக்குப் பிந்தைய இலங்கைச் சூழலில் ஜனநாயகத்தை மறுவாசிப்பு செய்வது, இலங்கை சமூகத்தின் மையமான சிக்கலைப் புரிந்து கொள்வதற்குப் பொருத்தமான பல புதிய கேள்விகளை எழுப்புகிறது. ஜனநாயகம் மற்றும் ஜனநாயக விழுமியங்கள், சுதந்திரம், சமத்துவம் மற்றும் நீதி ஆகியவை தொடர்ந்து சவாலுக்கு உள்ளாகின்றன என்பதை நாங்கள் நன்கு அறிவோம். ஜனநாயகத்தின் மீதான பழைய அச்சுறுத்தல்கள் தீர்க்கப்படாமல் இருப்பதும், ஒன்றுடனொன்று சார்ந்த உலக மயமாக்கப்பட்ட யதார்த்தத்திற்குள் இருந்து வெளிப்படும் புதிய அச்சுறுத்தல்களும் இலங்கையின் போருக்குப் பிந்தைய அரசியல் கதையாடல்களில் செல்வாக்கு செலுத்துகின்றன. இவை கடந்த 15 ஆண்டுகளில் ஏற்படுத்திய தாக்கம் பாரதூரமானது.

அதிகாரத்தை அணுகக்கூடியவர்கள் மக்கள் ஆட்சி மற்றும் அதனுடன் தொடர்புடைய அடிப்படை மதிப்புகளை ஒத்திவைக்கும் அளவுக்கு சமயோசிதமாக இருந்தபோதிலும், பொது மக்கள் சுதந்திரம், சமத்துவம் மற்றும் சுய ஆட்சி ஆகியவற்றைப் பின்தொடர்வதில் இன்னும் உற்சாகமாக இருப்பதை நிரூபித்துள்ளனர். வெகுஜன இயக்கங்கள் அவ்வப்போது தங்கள் கைகளில் அதைக் குவிப்பவர்களிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றிருந்தாலும், வெற்றிகள் எப்போதாவது தாங்கின, சுய ஆட்சி எதிர்ப்பாளர்கள் விரைவில் பலரின் கோரிக்கைகள் மற்றும் நடைமுறைகளைத் தகர்க்க வழிகளைக் கண்டனர். இதனால் ஜனநாயகம் என்பது நிறைவேற்றப்படாத வாக்குறுதியாகவே இருந்து வருகிறது.

ஜனநாயகத்தின் அனைத்து பகுப்பாய்வுகளும் மீண்டும் மீண்டும் புதிய புதிர்களுடன் நம்மை எதிர்கொள்கின்றன. இது சார்ந்து பல வினாக்கள் தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகின்றன. ஜனநாயகம் என்பது வரலாற்று ரீதியாகத் தீர்மானிக்கப்பட்ட போக்கின் வெளிப்பாடா? அல்லது அதன் சொந்த முரண்பாடுகளால் தவிர்க்க முடியாமல் சிதைந்து போகும் ஒன்றா? அதை 'ஏற்றுமதி' மற்றும் இடமாற்றம் செய்ய முடியுமா? ஏகாதிபத்திய சக்திகள் தங்கள் 'நியமமான அளவுகோல்' அரசியல் அமைப்பின் பதிப்பை மீண்டும் உருவாக்க அல்லது திணிக்க மூன்றாமுலக நாடுகள் எங்கும் முயற்சித்தன என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. ஆனால், அது வேலை செய்ததா? சில மாற்று அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாகக் கூட உயிர் பிழைத்துள்ளன. பெரும்பாலும் திணிப்புகள் மற்றும் வலுக்கட்டாயமான ஜனநாயக நிலைநிறுத்தல்கள் மோசமான தோல்விகளைச் சந்தித்தன.

ஜனநாயகத்தின் இலங்கை அனுபவம், அது ஒரு பலவீனமான மற்றும் மாயையான நடைமுறையாகக் காட்டுகிறது, அது அதிகாரத்தால் எளிதில் சிதைக்கப்படுகிறது, சமத்துவமின்மையால் அச்சுறுத்தப்படுகிறது, மேலும் 'அரச நிறுவனமானது', 'இராணுவ தொழில்துறை கட்டமைப்பால்' உடனடியாக பணயக்கைதியாக வைக்கப்பட்டுள்ளது. ஜனநாயகத்திற்கான அச்சுறுத்தல்கள் மேலிடத்திலிருந்து மட்டுமே வருகின்றன. அதே நேரத்தில், நமது அரசியல் நிறுவனங்கள் அனைத்தும் சக்திவாய்ந்த சிலரின் ஆதிக்கத்திற்கான ஜனநாயக முகப்பாகவே இருக்கின்றன. தேர்தல்கள் மோதலைத் தீர்ப்பதற்கான அல்லது ஜனநாயகத்திற்கான ஒரு கருவி அல்ல, ஆனால், அது வெற்றியாளர்களையும் தோல்வியுற்றவர்களையும் உருவாக்குவதால், மேலும் சில குழுக்களுக்கு மற்றவர்களை விட அதிக மோதலை ஏற்படுத்தும் ஒரு செயல்முறையாகும். அதிகார ஏற்றத்தாழ்வு கடுமையாக இருக்கும் போது, ஜனநாயகத்தை அளவிடுவதற்கான அளவுகோலாகப் பயன்படுத்தப்படும் தேர்தல்கள், இலங்கையில் அடிக்கடி நடந்ததைப் போல, ஒரு கேலிக்கூத்தாக மாறிவிடும்.

ஜனநாயகப் பொது அறிவு வெளிப்படுவதற்கும் மெதுவாகவும், படிப்படியாகவும் ஒருங்கிணைத்து, நிறுவனமயமாக்கப்படுவதற்கு, ஜனநாயக நடைமுறை தனிநபர் மற்றும் குடும்ப மட்டங்களில் தொடங்க வேண்டும். இறுதியில், ஒரு ஜனநாயக ஆட்சி, ஒரு ஜனநாயக அரசு மற்றும் அதன் பல்வேறு சட்ட கூறுகளை உள்ளடக்கியது. அது ஒரு ஜனநாயக சமுதாயத்திலிருந்து வளர வேண்டும், அங்கு படிப்படியாக ஜனநாயகமயமாக்கல் செயல்முறை இறுதி முடிவை விட முக்கியமானது. ஒருவேளை, இன்னும் முக்கியமானது, அர்த்தமுள்ள ஜனநாயகத்தை ஜனநாயக விரோத வழிமுறைகளால் அடைய முடியாது. எனவே, ஜனநாயக அரசியல் ஆட்சிகளை நிறுவுவதற்கு செயல்முறைகளின் ஜனநாயகத் தரம் மிகவும் முக்கியமானது மற்றும் ஜனநாயகத்தில் ஆர்வமுள்ள எவரும் செயல்முறைகள் மற்றும் பாதைகளின் பகுப்பாய்வைச் சேர்க்க வேண்டும்.

கொலனித்துவ காலத்தின் பிற்பகுதியில் இருந்து இலங்கையில் ஜனநாயக அரசியல் அமைப்பு உருவான விதம், அரச அதிகாரத்தின் இன-பெரும்பான்மை கட்டுமானத்திற்கான ஒரு 'நவீன' சூழலை வழங்கியது. ஆரம்பத்திலிருந்தே, இன அடையாள அரசியலுடன் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் உலகளாவிய உரிமைகள் மூலம் இலங்கையில் பிரதிநிதித்துவ ஜனநாயகம் வேரூன்றியது. ஒரு கட்சி அரசியல் அமைப்பு இல்லாமல், உள் குழு விசுவாசத்தை மோசமாகப் பிளவுபட்ட இடதுகளைத் தவிர சுதந்திரத்தின் போது,அடையாள அரசியல் ஜனநாயகப் போட்டிக்கான மேலாதிக்க வழிமுறையாக மாறியது; மற்றும் 1948இல் சுதந்திரத்தைத் தொடர்ந்து உருவான இனப் பெரும்பான்மை ஜனநாயகம், அடையாள அரசியலின் மூலம் ஜனநாயகத்தின் விளைபொருளாகும்.

சிறுபான்மையினரை அரசு அதிகாரக் களத்தில் இருந்து ஒதுக்கி வைக்கும் நடைமுறை, சுதந்திரத்திற்குப் பிறகு 'அரசு' கட்டமைத்தல் மற்றும் 'தேசம்' கட்டியெழுப்பும் செயல்முறைகள் வளர்ச்சியடைந்ததன் மூலம் மேலும் வலுப்பெற்றது. இந்த செயல்முறைகள் சிங்கள தேசியவாதத்தின் அரசியல் பார்வையின் படி வடிவமைக்கப்பட்டது, இது பிந்தைய கொலனித்துவ அரசை ஒற்றையாட்சி மற்றும் அதிகார மத்தியத்துவ அடிப்படையில் பார்த்தது. பன்மைத்துவ, பல கலாச்சார வகைகளை நிராகரித்து, ஒரு வலுவான ஒற்றையாட்சி அரசை உருவாக்குவது, 'தேசம்' என்ற கட்டமைப்பின் மையமாக மாறியது. அரசை ஆளும் சிங்கள அதிகார வர்க்கம், பிந்தைய கொலனித்துவ தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பன்மைத்துவத்தின் நல்லொழுக்கத்தையோ பொருத்தத்தையோ காணவில்லை.

இலங்கையின் அண்மைக்கால வரலாறு, ஒரு நிலையான மற்றும் நீதியான சமாதானத்திற்கு ஆழ்ந்த அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் அதிகாரப் பகிர்வு மற்றும் உயரடுக்கு ஆதிக்கம் செலுத்தும் புரவலர், வாடிக்கையாளர் (கொடுப்போர்-இரப்போர்) அரசியல் கலாசாரத்திலிருந்து விலகிச் செல்வது அவசியம் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. அவ்வாறான நடவடிக்கைகள் இல்லாவிட்டால் இலங்கை படிப்படியாக சமச்சீரற்ற சிதைவை நோக்கிச் செல்லும். எந்தவொரு சாத்தியமான தீர்வும் அடையாளக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் தனிப்பட்ட குடிமக்கள் என அனைத்து குடிமக்களுக்கும் பகிரப்பட்ட அரசியல் எதிர்காலத்தை உள்ளடக்கும். ஒரு பகிரப்பட்ட அரசியல் எதிர்காலத்தைக் கற்பனை செய்வது, ஜனநாயக, பன்மைத்துவ கட்டமைப்பிற்குள் பிந்தைய கொலனித்துவ அரசின் இடமாற்றத்தைக் கோருகிறது. ஒரு வெற்றியாளர் மற்றும் பாதிக்கப்பட்ட மனநிலையின் யதார்த்தம் அத்தகைய பகிரப்பட்ட அரசியல் எதிர்காலத்திற்குத் தடையாக இருக்கும். இலங்கை எதிர்நோக்கும் சவால் இதுதான்.

போருக்குப் பிந்தைய சமாதானத்தைப் பொறுத்தவரை, மோதல் தீர்வுக்கான அதிகபட்சப் பாதை யதார்த்தமற்றதாகவும் சாத்தியமற்றதாகவும் தெரிகிறது. இலங்கையில் தற்போதுள்ள அரசியல் நிலைமைகள் பூசல் தீர்வுக்கான அதிகபட்ச வேலைத்திட்டத்திற்கு இடமளிக்கவில்லை. சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான அரசியல் செயற்பாட்டாளர்களும் சமாதானத்தின் மீது முரண்பாடான எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளனர், ஒவ்வொருவரும் சமாதானத்தை வெவ்வேறு விதத்தில் கருத்துருவாக்குகிறார்கள் மற்றும் சமாதானத்தின் வெவ்வேறு விளைவுகளை எதிர்பார்க்கிறார்கள்.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமா என்ற ஆழமான சந்தேகம் உள்ளது. பிராந்திய சுயாட்சியுடன் கூடிய தீர்வு பிரிவினைக்கான படிக்கல்லாக அமையும் என சிங்கள தேசியவாதிகள் அஞ்சுகின்றனர். சிங்கள அதிகார வர்க்கம் கௌரவமான தீர்வுக்கு உடன்படாது என தமிழ் தேசியவாதிகள் அச்சம் கொள்கின்றனர். இதேவேளை, அரசாங்கத்திற்கும் தமிழர்களுக்கும் இடையிலான இணக்கப்பாட்டின் அடிப்படையிலான தீர்வு முஸ்லிம்களை நிரந்தரமாக அதிகாரம் இழந்த சிறுபான்மையினராகக் குறைக்கும் என முஸ்லிம் தேசியவாதிகள் அஞ்சுகின்றனர். இறுதியாக, இலங்கை அரசைக் கட்டுப்படுத்தும் சிங்கள அதிகார வர்க்கம், தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றுக்குத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை, அங்குதான் அனைத்தும் முடிவடையும் என்று தோன்றுகிறது.

துணை தேசியவாதத்தின் எழுச்சிக்கு அடித்தளமாக இருக்கும் சமூகத் தொகுதிகளால் இலங்கையின் பிரதான அரசியல் திவாலானதாகக் காணப்படுகிறது. அரசியல் உயரடுக்கு மிகக் குறைவாகவும், மிகவும் தாமதமாகவும் அமைதிக்கான பாதையை விட்டுவிடுவது மிகவும் ஆபத்தானது. இலங்கையின் மோதல்கள் அரசியல் களத்தினுள் நீடித்து வருவதால், நிரந்தர சமாதானம் அரசியல் மாற்றத்தின் மீது தொடர்ந்து கொண்டிருக்கிறது. இது அரசியல் அமைப்புகளையும் நடைமுறைகளையும் கணிசமான அதிகாரப் பகிர்வு (நிர்வாகப் பரவலாக்கம் மட்டுமல்ல) மற்றும் கணிசமான ஜனநாயகம் (வெறும் தேர்தல் ஜனநாயகம் அல்ல) திசையில் மாற்றுவதற்கான இரட்டை சவாலாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த சவால்கள் பிரிக்க முடியாதவை: அதிகாரப்பகிர்வு இல்லாத தேர்தல் ஜனநாயகமோ அல்லது ஜனநாயகம் இல்லாத அதிகாரப்பகிர்வோ ஒரு நியாயமான மற்றும் நீடித்த அமைதியைக் கொடுக்க முடியாது. ஜனநாயகம் குறித்துப் போருக்குப் பிந்தைய இலங்கை அனுபவம் தருகின்ற படிப்பினை இது.

## கடிதங்கள்

### குளத்தை புனரமையுங்கள்



முல்லைத்தீவு-அம்பலப்பெருமாள் குளத்தினை முழுமையாகப் புனரமையுங்கள் கிராம விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பகுதியில்120 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இக்கிராமத்தின் குளம் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக முழுமையான புனரமைப்புகள் இடம் பெறவில்லை. நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குக் கிடைக்கின்ற சிறியளவிலான நிதியிலிருந்து முக்கியமான புனரமைப்பு வேலைகள் அடிக்கடி மேற்கொள்ளப்படுவது உண்டு.

கன மழையின் போது விவசாயிகள் அணைக்கட்டின் முக்கிய பகுதிகளில் மண் மூடைகள் அடுக்குவது வழமையாக உள்ளது. இந்நிலையில் அம்பலப்பெருமாள் குளத்தினை முழுமையாகப் புனரமைத்து நீர்ப்பாசன வாய்க்கால்களையும் திருத்தங்கள் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அம்பலப்பெருமாள்குளம் முழுமையாகப் புனரமைக்கப்பட்டால் காலபோகத்தில் மட்டும் 600 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

- நடராசா கிருஸ்ணகுமார்



# பாசம்



சாணச்சீலை கழுவிய நீரில்
நீந்தித் திரிகிறது
பாலின் வாசம்...
உதறிவிரித்த சீலையிலும்
ஓய்வு கொண்ட வெயில்
கடவாயில் பால் வழிந்துஅமிழ
மூச்சு முட்ட குடித்து
தூங்கும் உடலின்
அழுகை ஒலியை எதிர்பார்த்து
காத்திருக்கிறாள் தாய்...
இத்தனைக்கும் மத்தியில்
வீட்டில்
சாணச்சீலையை
சுமக்கும் கூடையின்
அருகில் குத்திக்கொண்டு
அன்பை நிறைத்துக்
கொள்கிறது
இந்தமனது...

– காரையன் கதன்–

# நஞ்சுண்ட மூடன்



மீள முடியாத நீள யோசனை
தாங்க இயலாத தடித்த சிந்தனை
இதயத்தின் மேலே அருவச் சிலுவைகள்
சுமைகளோடு ஏற்றப்படுகிறது
மறுக்க மறுக்க இதயம்
சுமையேறித் துடிக்கிறது

சீரற்ற காலநிலை என் தேகமெங்கும்
மழை புயல் வெள்ளம் என
என் உணர்வுகள் சீரழிந்துக்
கொண்டிருக்கின்றன



செல்லும் இடங்கள் எல்லாம்
நான் ஏறிமிதிக்கப்படுவது போல
எனக்குள்ளாக என்னை
மிதித்து மிதித்துச் சாகிறேன்
மெல்ல இனிநான் சாகக்கூடும்

சோம்பலேறிப் போன கனவுகள்
கருமை விழுந்தபார்வை
கூட வரும் துன்பம்
கூடி எனைத் தின்னும் வஞ்சம்
நான் வாழ்விழக்க
அனைத்துத் தகுதிகளும் பெற்றுவிட்டேன்

ஏமாற்றங்களின் கால்வாயை
என் பக்கம் திருப்பியது யார்?
யாருமே இல்லையா?!
அப்படியானால்!
ஏமாற்றங்களை நானே தேடினேனா?!

விருந்து முடியும் முன்னே
நஞ்சு கலந்த அன்னப் பருக்கைகள்
என் கதை முடிக்கக் காத்திருக்கிறது
ம்...!
இலையை விரித்து விட்டார்கள்.

– புத்தகன் –
வவுனியா

# நினைவுத் தாகம்



அது ஓரழகிய காலம்
ஆற்றுப்படுக்கைதனில்
இலைச்சருகினிடையே நாமும்
ஈர உடைகள்
உலரும் வரை அண்ணார்ந்து மேகம்
எங்கே செல்கின்றதெனப்
பேசிக்கொண்டோம்...



ஊழையிடும் நரிகள்
எப்படி நாய்களைப்
போலிருக்கின்றன
நீகேட்டது இன்னும்
நினைவிருக்கிறது.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாதென்ற
வாத்தியாரைப் பார்த்து கிளுக்கெனச்
சிரித்தோம்.
ஐந்து சதத்திற்கு அப்பா வாங்கி வந்த
மிட்டாயை பாதியாய்ப் பிரித்துச் சுவைத்தோம்.
ஒற்றைக் கயிற்றில் ஊஞ்சலாடியபடியே
குளத்துக்குள் குதித்தோம்.
ஓராயிரம் கறுப்புவெள்ளைக்
காலநினைவுகள் – எல்லாம்
வர்ணமாகத் தெரிகின்றன எனக்கு
இப்போது போலவே
ஔடதங்களற்ற
ஆஸ்பத்திரியாய் வெறிச்சோடிக்
கிடக்கிறது ஆற்றோரம்...
தணியாது என் நினைவுத்தாகம்

– கவிக்கயல் பானு–
கெபிதிகொள்ளாவ

# 'The Residence'
## நிர்மாணப் பணிகள் ஆரம்பம்




சொகுசு வீடமைப்பு மற்றும் வாழ்க்கை முறைகளை மேம்படுத்தலில் புதிய யுகத்தை ஆரம்பிக்கும் வகையில், *Prime Lands (Pvt) Ltd.* தலவத்துகொட, சமகி மாவத்தையில், தனது புதிய வீடமைப்புத் திட்டமான *'The Residence'* இன் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளது.

*Prime Lands (Pvt) Ltd* இன் இணை தலைமை அதிகாரி சந்தமினி பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "எமது வாடிக்கையாளர்கள், எமது பங்காளர்களாக திகழ்கின்றனர். எமது பயணத்தில் மற்றுமொரு மைல்கல்லாக இன்றைய நாள் அமைந்துள்ளது. *Prime Group* சார்பாக எமது சகல பங்காளர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். சந்தையில் அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்னதாகவே, முறையான வடிவமைப்பைக் கூட பார்வையிடாமல், எமது புதிய திட்டத்தில் வீடொன்றை கொள்வனவு செய்வதற்கு உங்களில் பலர் தீர்மானித்துள்ளீர்கள். *Prime* மீது நீங்கள் கொண்டுள்ள அதீத நம்பிக்கைக்கு இது சான்றாக அமைந்துள்ளது. எம்மிடமிருந்து உறுதியான காணி மற்றும் சௌகரியமான இல்லங்களை எதிர்பார்க்கும் நீண்ட கால வாடிக்கையாளர்களாக உங்களில் பலர் உள்ளீர்கள். இன்று நான் ஒரு உறுதிமொழியை வழங்க விரும்புகின்றேன். எமது அனுபவம் வாய்ந்த திறமையான அணியினருடன், உங்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் கற்பனைகளுக்கு அப்பாற்பட்ட அழகிய இல்லமொன்றை வடிவமைத்து வழங்குவதற்கு நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்" என்றார்.

வீட்டு உரிமையாளர்களின் பிரத்தியேகமான தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ளக்கூடிய வகையில் விசேட கொடுப்பனவு திட்டத்தை இந்தத் நிர்மாணத்திட்டம் கொண்டுள்ளது.

*Prime Group* இனால் புரட்சிகரமான 1% மாதாந்த தவணைக் கொடுப்பனவுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையின் ரியல் எஸ்டேட் துறையில் முதன் முறையாக *'The Residence'* வீடமைப்புத் தொகுதிக்காக வழங்கப்படுகின்றது. அதனூடாக இந்தத் திட்டத்தை அனைவராலும் அணுகக்கூடியதாக்கியுள்ளது. முக்கியமாக, புதிய திட்டத்தின் 80% க்கும் அதிகமான இல்லங்கள் ஏற்கனவே விற்பனையாகியுள்ளன.

தலவத்துகொட நகரின் மையப்பகுதியில் சொர்க்கபுரியாக *'The Residence'* அமைந்திருக்கும். அதனூடாக வசிப்போருக்கு நகரின் வசதிகளுடன் சௌகரியமான வாழிடத்தை அனுபவிக்கக்கூடியதாக இருக்கும். நகரின் மையத்தில் அமைந்திருப்பதுடன், சொப்பிங், உணவகங்கள் மற்றும் களியாட்டப்பகுதிகள் போன்றவற்றுக்கு இலகுவாக பயணிக்கும் வசதியை வழங்குகின்றது. இதனால் வதிவிட நோக்கத்துக்கு உகந்த முதலீட்டுத் தெரிவாக அமைந்திருக்கும்.

உச்சளவு காணிப் பயன்பாட்டை மேற்கொண்டு, உயர் தரம் வாய்ந்த நிர்மாணத்தை கட்டுப்படியான விலையில் நிர்மாணிப்பது இந்தத் திட்டத்தின் எதிர்பார்ப்பாகும். *Prime Lands* இனால் பின்பற்றப்படும் விசேடமான வடிவமைப்பினூடாக, காணியை வினைத்திறனான வகையில் பயன்படுத்த முடிந்துள்ளதுடன், அதிகளவு இடவசதியை ஏற்படுத்திக் கொள்ள முடிந்துள்ளது. அத்துடன், தரத்தை பேணி நிர்மாண செலவுகளையும் நிர்வகித்துக் கொள்ள முடிந்துள்ளது. இதன் பெறுபேறாக, *Prime* இனால் உயர் தரம் வாய்ந்த இல்லங்களைப் பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருப்பதுடன், தலவத்துகொட பிரதேசத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய முடிந்துள்ளது.

# ComBank Trade Club நடத்திய நிகழ்வு



கொமர்ஷல் வங்கியினால் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு வங்கியின் வர்த்தகச் சேவைகளை இலகுவாக அணுகுவதன் மூலம் அவர்களை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட தளமான கொமர்ஷல் வங்கி வர்த்தகக் கழகம் (*ComBank Trade Club*), அண்மையில் 100க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் அவர்களது தேவைகள் மற்றும் கருத்துகள் பற்றி கலந்துரையாடவும் நிகழ்வொன்றை நடத்தியது.

'பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளித்தல்' எனும் தொனிப்பொருளில் மரினோ பீச் ஹோட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வானது, கொமர்ஷல் வங்கியின் வாடிக்கையாளர்களான இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயக்கொள்கைச்சபையின் அங்கத்தவரான பேராசிரியர் பிரியங்க துனுசிங்க, வணிக திணைக்களத்தின் பணிப்பாளரான நலிந்த விஜேரத்ன மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் (*IRD*) ஆணையாளர் பிரதீப் சில்வா, அத்துடன், *Diesel & Motor Engineering PLC (DIMO)* நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் மற்றும் பிரதம நிதியியல் அதிகாரியுமான சுரேஷ் குணரத்ன, ஆகிய திறன் கொண்ட ஆளுமைகளின் அறிவு மற்றும் அனுபவத்திலிருந்து பயன்களை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கியது.

உள்ளடக்கப்பட்ட தலைப்புகள் நாட்டின் தற்போதைய பொருளாதார மற்றும் வர்த்தக சூழல், வர்த்தக வாடிக்கையாளர்களுக்கு வணிக திணைக்களம் வழங்கும் சேவைகள் வெளிநாட்டு வர்த்தக பணிகள் மூலம் கிடைக்கும் நன்மைகள், இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கான வரிச் சலுகைகள் மற்றும் விலக்குகள் மற்றும் வாகன போக்குவரத்து துறைக்கு அப்பாற்பட்ட பல்வகை வணிகத்தின் வெற்றிக் கதைகள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தன.

இந்நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் சிரேஷ்ட பிரதிநிதிகளான வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் பெருநிறுவன வங்கியியல், செல்வி. தமரா பேர்னார்ட், பிரதி பொது முகாமையாளர் திறைசேரி, அசேல விஜேசிறிவர்தன மற்றும் உதவிப் பொது முகாமையாளர் தனிப்பட்ட வங்கியியல் திருமதி.மிதிலா ஷாமினி ஆகியோர் கலந்து கொண்டனர். இம்மன்றத்தின் முடிவில் தொகுப்பாளர்களின் பங்கேற்புடன் ஒரு குழு கலந்துரையாடல் நடைபெற்றதுடன் இது பார்வையாளர்களின் உறுப்பினர்களுக்கு வளவாளர்களிடமும் வங்கியின் பெருநிறுவன முகாமைத்துவத்தின் பிரதிநிதிகளிடமும் கேள்விகளை எழுப்புவதற்கான வாய்ப்பை வழங்கியது.

# PCI DSS Version 4 சான்றிதழைப் பெற்ற யூனியன் வங்கி



யூனியன் வங்கி *Payment Card Industry Data Security Standard (PCI DSS) version 4* சான்றிதழைப் பெற்ற முதலாவது வங்கி எனும் முக்கியமான மைல்கல்லை பூர்த்தி செய்துள்ளது. இந்த நிலை கௌரவிப்பைப் பெற்றுக் கொண்ட முதலாவது உள்நாட்டு வங்கி எனும் நிலையை எய்தியுள்ளது. கடந்த ஐந்து வருடங்களில் *PCI DSS* சான்றிதழினூடாக தொடர்ச்சியாக எய்தியிருந்த சாதனைகளின் வெளிப்பாடாக, வாடிக்கையாளர் தகவல் பாதுகாப்பில் உயர் நியமங்களை பேணியிருந்தமைக்காக வங்கியின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இந்த சான்றிதழ் மேலும் உறுதி செய்துள்ளது.

யூனியன் வங்கியின் பிரதம தகவல் அதிகாரி நிஷில கொடிப்பிலி கருத்துத் தெரிவிக்கையில், "*PCI DSS version 4* சான்றிதழ் என்பதனூடாக, பாதுகாப்பான கொடுப்பனவு கையாளலில் பிந்திய மற்றும் மேம்படுத்தப்பட்ட நியமங்கள் பிரதிபலிக்கப்படுகின்றன. அதனூடாக பிந்திய பாதுகாப்பு ஏற்பாடுகளினூடாக வாடிக்கையாளர் தரவுகள் பாதுகாக்கப்படுவது உறுதி செய்யப்படுகின்றது. வாடிக்கையாளர் தகவலை பாதுகாப்பதற்கான யூனியன் வங்கியின் அர்ப்பணிப்பு மற்றும் அதன் நிதிச் சேவைகள் மீதான நம்பிக்கையை பேணுவதற்கான எடுத்துக்காட்டாக இந்த சான்றிதழ் அமைந்துள்ளது. இந்த சாதனையை வங்கி கொண்டாடும் நிலையில், சான்றளிப்பு செயன்முறையில் பங்களிப்பு வழங்கியிருந்த அனைவரின் முயற்சிகளை கௌரவிக்க வேண்டியதும் முக்கியமானதாகும். குறிப்பாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு அணிகளின் கண்ணியமான மற்றும் நிபுணத்துவமான செயற்பாடுகள் இந்த வெற்றியில் முக்கிய பங்காற்றியிருந்தன. பாதுகாப்பு மற்றும் பின்பற்றல் செயற்பாடுகளில் வங்கியின் முன்னாயத்தமான செயற்பாடுகள் தொழிற்துறையில் நியமத்தை தோற்றுவித்துள்ளதுடன், நவீன பாதுகாப்பு செயன்முறைகளை பின்பற்றுவதில் தலைமைத்துவத்தையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது" என்றார்.

பாதுகாப்பு மற்றும் பின்பற்றல் செயற்பாடுகளில் யூனியன் வங்கி காண்பிக்கும் அர்ப்பணிப்பினூடாக, வாடிக்கையாளர்கள் மற்றும் பங்காளர்கள் மத்தியில் நம்பிக்கை தூண்டுவதாக அமைந்திருப்பதுடன், தரவு பாதுகாப்பு மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பு போன்றவற்றில் உயர் நியமங்களை பேணுவதற்கு உதவியாகவும் அமையும்.





சி.கதீசனா
3ஆம் வருடம்
ஊடகக் கற்கைகள்
யாழ்ப்பாண
ல்கலைக்கழகம்

# “உதிரம் கொடுப்போம் உயிரைக் காப்போம்”

உலக இரத்ததான தினம் ஆண்டுதோறும் ஜூன் மாதம் 14ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்புடன் உலக சுகாதார நிறுவனத்தால் சர்வதேசரீதியில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

தானங்களில் சிறந்த தானமாக இரத்த தானத்தினை மருத்துவத்துறை முன்னிறுத்துகிறது. பல்வேறு மருத்துவ அறுவைச் சிகிச்சைகளின் போது ஒரு மருத்துவ நோயாளிக்குத் தேவைப்படும் முக்கியமான விடயமாக இரத்தம் காணப்படுகிறது.

எல்லோராலும் எல்லோருக்கும் இரத்தத்தினை அளித்துவிட முடியாது ஒருவருக்கு இரத்தம் தேவைப்படும் சமயத்தில் அவருக்குரிய வகையாளரைத் தேடிக் கொண்டு வருவது சிரமம். எனவேதான் இரத்ததானம் என்ற பெயரில் விருப்பப்பட்டு வழங்கும் நபர்களிடமிருந்து இரத்தம் தானமாகப் பெறப்பட்டு மருத்துவமனை மற்றும் இரத்த வங்கிகளில் இருப்பு வைக்கப்படுகிறது.

இரத்தப் பிரிவுகளான A,B,0 ஆகிய பிரிவுகளைக் கண்டுபிடித்த கார்ல் லெண்டினரின் பிறந்த தினத்திலே இத் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இரத்த தானம் செய்பவருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் எனப் பார்க்கும்போது இரத்த தானம் செய்பவரின் வயது 18 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்ட வயதினை கொண்டிருத்தல் வேண்டும். இரத்த ஹிமோகுளோபின் அளவு 12 கிராமிற்குக் குறையாமலும் 16 கிராமிற்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும்.

ஆண், பெண் இரு பாலினரும் இரத்த தானம் செய்ய தகுதியுடையவர்கள். எந்த ஒரு தொற்று நோய் பாதிப்பு ஏற்பட்டவராகவும் இருத்தல் கூடாது. இரத்ததானம் கொடுப்பதற்கு கடந்த ஓராண்டுக்குள் எந்த வித தடுப்பு மருந்தும் உபயோகித்து இருத்தல் கூடாது போன்ற தகுதிகளினை கொண்டிருத்தல் வேண்டும்.

இரத்ததானம் செய்வதற்குரிய நடைமுறைகள் எனப் பார்க்கும்போது மது அருந்தியதிலிருந்து 24 மணி நேரத்துக்கு பின்னரே இரத்த தானம் வழங்க முடியும் முடிந்தவரை மது அருந்துதலை தவிர்த்தல் வேண்டும். இரத்த தானம் வழங்குவதற்கு முன்பு நன்கு உணவு உண்ட பின்னரே இரத்த தானம் செய்ய வேண்டும். உணவு உறக்கம் ஆகிய இரண்டும் மிகவும் அவசியமாகும். இரத்த தானம் செய்வதற்கு முன்பு கைகளை நன்கு சுத்தமாக வைத்திருத்தல் அவசியமாகும். தொடர்ச்சியாக இரத்த தானம் செய்ய விரும்புபவர் குறைந்தது மூன்று மாத இடைவெளிக்குப் பின்னரே இரத்த தானத்தை வழங்க முடியும். இரத்த தானம் செய்தவுடன் கைகளை நன்றாக மடக்கி மேலே உயர்த்திப் பிடிக்க வேண்டும் இவ்வாறான நடைமுறைகளை கையாளுதல் வேண்டும்.

இன்றைய காலத்தில் பலருக்கு இரத்த தானம் அவசியமாகிறது. பல வைத்தியசாலைகளில் இரத்த தட்டுப்பாடு நிலவுகிறது. நாம் கொடுக்கின்ற ஒவ்வொரு துளி இரத்தமும் இன்னொருவரின் உயிரினை காப்பாற்றலாம். வீதி விபத்து ,யுத்தம், அனர்த்தம் குருதிப்புற்றுநோய் போன்ற பல்வேறு காரணங்களினால்

> **இரத்த தான செயற்பாட்டில் ஈடுபடுதல் எமது உடலிற்கும் நன்மை பயக்கும். உடலில் உள்ள ஒவ்வொரு இரத்த அணுவும் மூன்று மாத காலத்தில் தானாகவே அழிந்து மீண்டும் உற்பத்தி ஆகிறது. எனவே, இதனால் உடல் பலவீனமடையுமென்றோ எந்த பாதிப்பும் ஏற்படுமென்றோ பின் வாங்கலை விடுத்து முன் வர வேண்டும்.**
> **அரச மருத்துவமனைகள் தனியார் அமைப்புகள் பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் இரத்த தானம் வழங்கும் செயற்பாடு இடம்பெறுகின்றது**

சத்திர சிகிச்சைகளின் போது குருதி தேவைப்படுமிடத்தும் மற்றும் குருதி மாற்றுச் சிகிச்சைக்கு உட்படுத்தும் போது குருதியைத் தானமாகப் பெறுபவர்கள் பயனடைகிறார்கள்.

குருதியின் தேவை எச் சந்தர்ப்பத்தில் தேவைப்படுமெனத் திட்டவட்டமாகக் குறிப்பிட முடியாது. குருதியைப் பெற்றுக் கொள்பவர்கள் தன் உயிரை மீளப் பெற்றுக்கொள்வதனால் நன்மை அடைவதைப் போலவே இரத்த தானம் செய்பவர்களும் மறைமுகமாக நன்மையடைகின்றார்கள் .இரத்த தானம் செய்வது இயற்கையாக புதிய இரத்தம் உடலில் ஏற்படுவதற்குச் சமமாகும், தற்போதைய பல்வேறு ஆய்வுகளில் இரத்த தானம் செய்வதனால் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு குறைவு என்று கண்டறியப்பட்டுள்ளது. ஹிமோகுளோபின் அளவினை கட்டுப்படுத்தியும் சமச்சீராகப் பராமரிக்கும், இரத்த தானம் செய்தல் சிறந்தது இரத்த அழுத்தம் சீராகப் பராமரிக்கப்படுகிறது, இவ்வாறான மறைமுகமான நன்மைகள் இரத்த தானம் செய்வதனால் கிடைக்கப்பெறுகின்றது என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

கடந்த ஆண்டில் 2023 இரத்த தானத்திற்குரிய கருப்பொருளாக இரத்தம் கொடுங்கள், பிளாஸ்மாவை கொடுங்கள், வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளுங்கள், அடிக்கடி பகிர்ந்து கொள்ளுங்கள் என்ற கருப்பொருள் காணப்பட்டுள்ளது. மனிதனின் உயிர்நாடியாகக் காணப்படுகின்ற இரத்தத்தின் முக்கியத்துவத்தை அறிவதும் இரத்த தானம் செய்வதன் முக்கியத்துவத்தைக் கூறுவதும் இந்நாளின் நோக்கமாகும். முதல் உலக இரத்ததான தினம் 2005இல் அனுஷ்டிக்கப்பட்டது. ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு கருப்பொருளுடன் இரத்த தான தினம் நிகழ்த்தப்படுகிறது.

இரத்த தானம் வழங்க வேண்டும் என்று ஆர்வத்தில் அனைவராலும் வழங்கி விட முடியாது சில நோய்த் தாக்கம் ஏற்பட்டவர்கள் இரத்த தானம் செய்வதனை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். அதாவது எயிட்ஸ், நீரழிவு நோய், இரத்த அழுத்தம் வலிப்பு நோய் உள்ளவர்கள் ஏற்கனவே இரத்தம் ஏற்றப்பட்டவர்கள், பெண்கள் மாதவிடாய் காலங்களில், தாய்மையடைந்த காலம் முதல் மகப்பேறு காலம் வரை இரத்த தானம் செய்வதைத் தவிர்த்தல் வேண்டும், வேறு ஏதாவது குறைபாட்டிற்காகச் சிகிச்சை பெற்று வருபவர்களும் இரத்த தானம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

இன்றைய காலப்பகுதியில் இரத்ததானம் பற்றி பலர் கேள்விப்பட்டிருப்பினும் அதனைச் செய்வதற்குப் பலரும் முன் வருவதில்லை. உடல் பருமன் அதிகரிக்கும், வேறு நோய்கள் ஏற்படும், உடல் பலவீனமடையும் போன்ற தவறான எண்ணங்களினால் இரத்த தானம் செய்வதற்கு முன் வருவதில்லை. இரத்ததானம் செய்வதற்கு 5 தொடக்கம் 10 நிமிடங்கள் போதுமானது. எனவே இரத்த தான செயற்பாட்டில் ஈடுபடுதல் எமது உடலிற்கும் நன்மை பயக்கும். உடலில் உள்ள ஒவ்வொரு இரத்த அணுவும் மூன்று மாத காலத்தில் தானாகவே அழிந்து மீண்டும் உற்பத்தி ஆகிறது. எனவே, இதனால் உடல் பலவீனமடையுமென்றோ எந்த பாதிப்பும் ஏற்படுமென்றோ பின் வாங்கலை விடுத்து முன் வர வேண்டும்.

அரச மருத்துவமனைகள் தனியார் அமைப்புகள் பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் இரத்த தானம் வழங்கும் செயற்பாடு இடம்பெறுகின்றது.

அந்த நேரங்களில் எமது சிறிதளவு நேரத்தை ஒதுக்கி நாம் வழங்குகின்ற குருதிக் கொடையால் இன்னொரு உயிர் பாதுகாக்கப்படும் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இருந்தாலும் இரத்த தானம் வழங்கிய பின் சிலவற்றை தவிர்த்துக்கொள்ள வேண்டும் அவற்றை கவனத்தில் கொள்வோமாயின் மது அருந்துதலை தவிர்க்க வேண்டும், கடுமையான உடற்பயிற்சி மேற்கொள்ளல் ,பலமான பொருட்களினை தூக்குதல் போன்றவற்றினை தவிர்த்துக் கொள்ள வேண்டும். இத்தினத்தில் ஒருவர் தாமாக முன்வந்து உயிர் காக்க உதவும் இரத்தத்தை அளிப்பவர்களுக்கு நன்றி செலுத்துவதோடு தரம், பாதுகாப்பு இரத்தத்தின் இருப்பு மற்றும் நோயாளியின் தேவையைப் பொறுத்து இரத்தம் தொடர்பானவற்றை அளிப்பது ஆகியவற்றிற்காக தொடர்ந்து இரத்த தானம் செய்வதின் தேவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினம் நிகழ்த்தப்படுகிறது.

“உதிரம் கொடுப்போம் உயிரைக் காப்போம்"



# சித்தமருத்துவ சிகிச்சையில் அட்டைவிடல்





வைத்திய கலாநிதி.சுலோசனா
பஞ்சராசா BSMS(Jaf)
சிவா சித்த வைத்திய
மையம், கைதடி
Member of Jaffna Science
Association, Section C

சித்த மருத்துவத்தின் பிரகாரம் முத்தாதுக்கள் (வாதம், பித்தம், கபம்), ஏழு உடற்தாதுக்கள் (சாரம், செந்நீர், ஊன், கொழுப்பு, என்பு, மச்சை, சுக்கிலம்/ ஆர்த்தவம்) என்பன சமநிலையில் பேணப்பட்டு அக்கினியானது நன்நிலையில் தொழிற்பட்டு மும்மலங்கள் (சிறுநீர், வியர்வை, மலம்) நல்லமுறையில் வெளியேறி ஆன்மா மற்றும் ஐம்பொறிகளும் நன்னிலையில் செயற்படுவதே ஆரோக்கியம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

வாத, பித்த, கப தோஸங்களில் உணவாதி செயல்களால் ஏற்படுகின்ற மாறுபாடு காரணமாகவே நோய்கள் ஏற்படுகின்றன. இத் தோஸங்களைச் சமநிலையில் பேணுவதன் மூலம் நோய்களைக் குணமாக்க முடியும் என சித்த மருத்துவ நூல்கள் குறிப்பிடுகின்றன.

தோஸங்கள் அதிகரித்து காணப்படும் நிலையில் அத்தோஸத்தை கிட்டிய வழியால் வெளியேற்றும் செயல்முறை சோதன கர்மம் எனப்படும்.

தோஸங்கள் அதிகரித்து காணப்படும் நிலையில் அத்தோஸத்தை அதே இடத்தில் சமப்படுத்தும் செயன்முறை சமன கர்மம் எனப்படும்.

கபதோஸமானது இதயத்திற்கு மேற்பகுதியிலும், பித்த தோஸமானது இதயத்திற்கும் நாபிக்கும் இடைப்பட்ட பகுதியிலும் வாத தோஸமானது நாபிக்கு கீழ்பகுதியிலும் காணப்படும்.

இரத்தத்தில் உள்ள பித்த தோஸத்தை வெளிப்படுத்த இரத்த மோட்சனம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த இரத்த மோட்சனமானது 3 விதமாக மேற்கொள்ளப்படுகின்றது.

1. கொம்பு உறிஞ்சல் - குழாய் போன்ற கருவியால் இரத்தத்தை உறிஞ்சி எடுத்தல்.
2. நாளத்தைக் கீறி வெளியேற்றுதல் - கார் இரத்தக்குழாய்களை கீறி இரத்தத்தை வெளியேற்றல்.
3. அட்டை விடுதல் - அட்டை விடல்மருத்துவத்தின் பலன் “அமிர்தம்” உட்கொண்டதற்கான பலனாகும்.

இது பாதுகாப்பான வலியற்ற சிகிச்சை முறையாகும். இச் சிகிச்சை முறைக்காக வாழ்க்கை முறைகளை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. இச் சிகிச்சையில் ஒரு நோயாளிக்கு பயன்படுத்திய அட்டை மற்றொரு நோயாளிக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. இச் சிகிச்சையின் போது அசுத்த இரத்தத்தை அட்டை உறுஞ்சுவதுடன் தனது உமிழ்நீரை இரத்தத்துள் செலுத்துகின்றது. அட்டையின் உமிழ்நீரில் உள்ள ர்சைரனin என்னும் வேதியல் பொருள் இரத்தம் கட்டிபடுவதைத் தடுத்து சீரான இரத்த ஓட்டத்தினைப் பேணுகின்றது.

அட்டை விடுதலின் பின்வரும் நன்மைகள் ஏற்படுகின்றன.

(1) வீக்கம் குறைகின்றது.
(2) நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கின்றது.
(3) இரத்த நாளங்கள் சீர்செய்யப்படுகின்றது.
(4) இரத்த ஓட்டம் சீர்செய்யப்படுகின்றது.
(5) மனஅழுத்தம் குறைகின்றது.
(6) இரத்த நாளங்களில் இரத்தம் உறைதலை சரிசெய்யும்.
(7) வலி நிவாரணியாகப் பயன்படுகின்றது.
(8) பிற சுத்திகரிப்பு சிகிச்சை முறைகளுடன் ஒப்பிடும்போது அட்டைவிடுதல் தேவையற்ற தழும்பு, எரிச்சல், நிறமாற்றம் போன்றவை ஏற்படுவது குறைவு.
(9) தோலில் ஏற்படும் வீக்கம், வலி, அரிப்பு, எரிச்சல், தழும்புகள் போன்றவை இந்த சிகிச்சை முறையால் சரி செய்யப்படுகின்றது.

அன்னப்பறவை நீர் கலந்த பாலிலுள்ள நீரைப் பிரித்துப் பாலைப் பருகுவது போல உடலிலுள்ள நச்சுநீரைப் பருகி, குருதியைத் தூய்மைப்படுத்துவதற்காக அட்டை விடப்படுகின்றது.

அட்டைகளில் பல வகைகள் காணப்பட்ட போதிலும் இச் சிகிச்சை முறைக்காக Hirudine medicinalis எனப்படும் அட்டை வகையே பயன்படுத்தப்படுகின்றது.

இதிலும் தீவிரநோய் நிலைமைகளில் ஆண் அட்டையும், சாதாரண நோய் நிலைமைகளில் பெண் அட்டையும் பயன்படுத்தப்படுகின்றது.

அட்டைகளைத் தெரிந்தெடுக்கும் முறைகள்

அட்டைகளில் நல்ல அட்டைகள், தீய அட்டைகள், சாதாரண அட்டைகள் என மூன்று பிரிவுகள் காணப்படுகின்றன. சாதாரண அட்டைகளே சிகிச்சைக்கு கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்றது. இவை பொன்நிறத்தில் சற்று கருமைநிறம் சேர்ந்தவையாகவும், ஐந்து சென்ரிமீற்றர் நீளமுள்ளவையாகக் காணப்படும். நன்னீரில் காணப்படும் அட்டைகளே சிகிச்சைக்கு பயன்படுகின்றது.

அட்டைகள் பயன்படுத்தக்கூடிய நோய் நிலைமைகள்


1. உயர் குருதி அமுக்கம் (Hyper tension)
2. அக்கி (Ace)
3. காளாஞ்சு படை (Psoriasis)
4. கரப்பன் (eczema)
5. சதையி இல் ஏற்படும் தாபிதம் (Pancreatitis)
6. வயிற்றுப் புண் / குன்மம் (Gastric ulcer)
7. சிரத்தம்ப வாதம் (Cerebral palsy)
8. மூலரோகம் (Hemorrhoids)
9. சர்மரோகணங்கள் (Skin diseases)
10. அசுத்த விரணம்
11. நாளப் புடைச்சல் (Varicose ulcer)
12. வழுக்கை (Alopecia)
13. யானைக்கால் (Elephantiasis)
14. வெண்குஷ்டம் (Vitiligo)
15. நாட்பட்ட புண் (Chronic wound)

இந்த வகையில் அட்டை விடுதல் சிகிச்சை முறையானது நாளப்புடைச்சல் (Varicose Vein), நாளப்புடைச்சல் புண் (Varicose ulcer), கால் வீக்கம் (ankleoedema), வீக்கம் (swelling), சர்மரோகம் (skin disease) போன்ற நோய்களுக்கு அதிகளவில் பயன்படுத்தப்படுவதுடன் நோயாளர்கள் அதிகளவில் குணமடைவதையும் அவதானிக்க முடிகின்றது.

அட்டைவிடுதல் செய்முறை மேற்கொள்வதற்கு முன்னர் நோயாளியில் குருதி அமுக்கம் (Blood Pressure), குருதி உறையும் நேரம் (Clotting time), Full Blood Count ஆகிய பரிசோதனைகள் மேற்கோள்ளப்பட வேண்டும்.

நோயின் தீவிரத்தன்மையைப் பொறுத்து 5 - 10 தடவைகள் அட்டை விடல் சிகிச்சை மேற்கொள்ளலாம். ஒருமுறை அட்டைவிடல் மேற்கொண்டால் 7 நாட்களின் பின்னரே அட்டைவிடல் மேற்கொள்ளவேண்டும்.

எனவே வலியை ஏற்படுத்தாத அட்டைவிடல் சிகிச்சை முறை மூலம் நோய்களை குணமாக்கி ஆரோக்கியத்தைப் பேணுவோம்.



குவைத்

## குவைத்தில் பாரிய தீ விபத்து:
# இந்தியர்கள் உட்பட 49 பலி




குவைத்-தெற்கு அகமதி மாகாணத்தில் மங்கஃப் நகரத்தில் அமைந்துள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் புதன்கிழமை (12) ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் சுமார் 49 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 40 பேர் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆறு மாடிகள் கொண்ட இந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் அதிகம் தங்கியுள்ளனர். இந்த கட்டிடம் குவைத் நாட்டை சேர்ந்தவருக்குச் சொந்தமானது. இந்த விபத்துக்கான காரணம் குறித்து அலசும் போது அந்த அடுக்குமாடிக் குடியிருப்பின் கட்டுமான விதிமீறல்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. அது குறித்து அந்த நாட்டு அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

அந்தவகையில், எகிப்து நாட்டு காவலாளி தங்கியிருந்த பகுதியில் வைக்கப்பட்டிருந்த சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்தது தீ விபத்துக்குக் காரணம் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்ற நிலையில், கட்டிடத்தின் கீழ்த்தளத்தில் அந்த காவலாளி தங்கியிருந்ததாகவும், அதையடுத்து அடுக்குமாடிக் குடியிருப்பின் மற்ற பகுதிகளுக்கும் தீ வேகமாகப் பரவியுள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், தீ விபத்து ஏற்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்பில் சுமார் 195 பேர் தங்கி இருந்துள்ள நிலையில், அதில் பெரும்பாலானோர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களில் 150க்கும் மேற்பட்டவர்கள் இந்தியர்கள் என்பதும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், தீ விபத்து ஏற்பட்ட போது, அடுக்குமாடிக் குடியிருப்பில் தங்கி இருந்தவர்களில் 92 பேர் பாதுகாப்பாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, 20 பேர் இரவு நேர வேலை என்பதால் பணிக்குச் சென்றுள்ளனர்.

அதேசமயம், தீ விபத்து ஏற்பட்ட நேரம் அதிகாலை 4 மணி என்பதால் பெரும்பாலானவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துள்ளனர். அதுவே உயிரிழப்பு அதிகரிக்கக் காரணம் என கூறப்படுகின்றது. இத்தீயினால் ஏற்பட்ட புகையைச் சுவாசித்த காரணத்தால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு பெரும்பாலானவர்கள் உயிரிழந்துள்ளனர். சிலர் தீ விபத்திலிருந்து தப்பிக்க மாடியிலிருந்து கீழே குதிக்க முயன்று உயிரிழந்துள்ளனர்.

மங்கோலியா

## பனிப்புயலால்
# 70 இலட்சம் கால்நடைகள் பலி

மங்கோலியா நாட்டில் ஏற்பட்ட கடும் பனிப்புயலுக்கு சுமார் 70 இலட்சம் கால்நடைகள் பலியாகியுள்ளது.

ரஷ்யாவுக்கும், சீனா மற்றும் தீபெத்துக்கு இடையில் கடல் மட்டத்தில் இருந்து அதிக உயரத்தில் மங்கோலியா அமைந்துள்ளது.

இதனால் வருடத்திற்கு 10 மாதங்கள் மங்கோலியாவில் மைனஸ் 30 டிகிரி செல்சியல் அளவில் குளிர்ந்த வானிலையே



நிலவும். இந்த நிலையில் மங்கோலியாவில் இயல்பைக் காட்டிலும் பயங்கரமான பனிப்புயல் வீசி வருகிறது.

இதன் காரணமாக மங்கோலியா நாடு முழுவதும் பனியால் உறைந்து உள்ளதுடன் விளை நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள் ஆகியவை பனிப்புயலுக்குச் சேதமடைந்தன.

இதனால் அங்கு உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்ய முடியாமல் பொதுமக்கள் தவித்து வருகின்ற நிலையில் உணவு பொருள் தட்டுப்பாட்டால் மங்கோலியாவில் 70 இலட்சம் கால்நடைகள் பலியாகியுள்ளதாக அந்த நாட்டின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உத்தரப்பிரதேசம்

## மகனின் கழுத்தை அறுத்து கொன்ற
# கொடூர தாய் கைது



உத்தரப்பிரதேச மாநிலம், பிஜ்னோர் பகுதியைச் சேர்ந்தவர் கபில் குமார். இவருடைய மனைவி ஆதேஷ் தேவி. இந்த தம்பதியினருக்கு 4 வயதில் மகன் உள்ள நிலையில், கபில் குமார் வழக்கம் போல் பணிக்காக வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

அந்த சமயத்தில், ஆதேஷ் தேவி வீட்டிலிருந்த கத்தியைக் கொண்டு தனது 4 வயது மகனின் கழுத்தை அறுத்து கொலை செய்துள்ளார். இதில் இரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே அக்குழந்தை உயிரிழந்துள்ளது.

அதன் பின்னர், குறித்த தாய், வீட்டிற்குள் உள்ள ஒரு அடுப்பில் குழந்தையின் உடலை எரிக்க முயன்றுள்ளார். அந்த நேரத்தில், அவரின் கணவர் கபில் குமார் வேலை முடிந்து வீடு திரும்பியபோது, மகன் இறந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து உடனடியாக தனது குடும்பத்தினரை உதவிக்காக அழைத்துள்ளார்.

குடும்ப உறுப்பினர்கள் வந்ததும், ஆதாஷ் தேவி, மண்வெட்டியுடன், அவர்களையும் கபில் குமாரையும் வீட்டை விட்டு விரட்டியுள்ளார்.

இந்த கொடூர சம்பவம் குறித்து கபில் குமார் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார். அவர் கொடுத்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார், குழந்தையின் சடலத்தை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

மேலும், அவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஆதாஷ் தேவி மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார். அந்த விசாரணையில் ஆதாஷ் தேவி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பது தெரியவந்துள்ளது.

இது குறித்து பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பெற்ற தாயே தனது 4 வயது மகனைக் கழுத்து அறுத்துக் கொலை செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புதுடெல்லி

## புதுடெல்லிக்கு தண்ணீர் இல்லை:
# ஹிமாச்சல அரசு கைவிரிப்பு

“புதுடெல்லிக்கு தண்ணீர் திறந்து விடும் அளவுக்கு தங்களிடம் உபரி நீர் இல்லை”என உச்சநீதிமன்றத்தில் ஹிமாச்சல பிரதேச அரசு தெரிவித்துள்ளது.

புதுடெல்லியில் கடுமையான குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனைச் சமாளிக்க உத்தரப்பிரதேசம், ஹரியானா, ஹிமாச்சல பிரதேசம் உள்ளிட்ட அண்டை மாநிலங்களில் இருந்து கூடுதலாக நீர் திறக்க வேண்டும் என புதுடெல்லியை ஆட்சி செய்யும் ஆம் ஆத்மி அரசு உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தது.

இதனை விசாரித்த நீதிமன்றம், சுமார் 137 கியூசெக்ஸ் நீரைக் கூடுதலாகத் திறக்க வேண்டும் என ஹிமாச்சல பிரதேச அரசுக்கு உத்தரவிட்டது. இது குறித்த தகவலை ஹரியானா அரசிடம் தெரிவிக்க வேண்டும் எனவும், அதனை வாஜிராபாத் அணை வழியாக வெளியேற்றுவதற்கான வசதிகளை ஹரியானா மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் எனவும் உத்தரவிட்டது.

இந்நிலையில், உச்சநீதிமன்றத்தின் கோடைகால அமர்வில் இடம்பெற்றுள்ள நீதிபதிகள் பிரசாந்த் குமார் மிஸ்ரா மற்றும் பிரசன்னா வரலே ஆகியோர் முன்பு ஹிமாச்சல பிரதேச அரசு தாக்கல் செய்த மனுவில், புதுடெல்லி அரசுக்கு திறக்கும் அளவுக்கு தங்களிடம் 136 கியூசெக்ஸ் உபரி நீர் இல்லை என தெரிவித்துள்ளது.

இதன் பின்னர் நீதிபதிகள் கூறுகையில், “மாநிலங்களுக்கு இடையே யமுனை நீரை பகிர்ந்து கொள்ளும் விடயம் சிக்கலானது. இது குறித்து முடிவு செய்ய நீதிமன்றத்திடம் தொழில்நுட்ப வல்லுநர்கள் இல்லை” என்றனர். மேலும் இது குறித்து புதுடெல்லி அரசு, அப்பர் யமுனை நதிநீர் வாரியத்திடம்” மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இருபதுக்கு-20 உலகக் கிண்ணம்:
# சுப்பர் 8இல் இரு அணிகள் நுழைந்தன




சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர்-8 சுற்றுக்கு மேற்கிந்தியத் தீவுகள், இந்தியா ஆகியன தகுதி பெற்றுள்ளன.

ட்ரினிடாட்டில் வியாழக்கிழமை (13) நடைபெற்ற நியூசிலாந்துடனான குழு சி போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே சுப்பர்-8 சுற்றுக்கு மேற்கிந்தியத் தீவுகள் தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்தின் அணித்தலைவர் கேன் வில்லியம்சன், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், ட்ரெண்ட் போல்ட் (3), டிம் செளதி (2), லொக்கி பெர்கியூசன் (2), ஜேம்ஸ் நீஷம், மிற்செல் சான்ட்னெரின் விக்கெட்டுகளைப் பறிகொடுத்தபோதும் ஷெர்ஃபேன் ருதஃபோர்ட்டின் ஆட்டமிழக்காத 68 (39) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 150 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, அகீல் ஹொஸைன், அல்ஸாரி ஜோசப் (4), குடகேஷ் மோட்டி (3), அன்ட்ரே ரஸலிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து கிளென் பிலிப்ஸ் 40 (33), பின் அலென்னின் 26 (23), மிற்செல் சான்ட்னெரின் ஆட்டமிழக்காத 21 (12) ஓட்டங்களுக்கு மத்தியிலும் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களையே பெற்று 13 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ருதஃபோர்ட் தெரிவானார்.

இந்நிலையில், ஐக்கிய அமெரிக்காவின் நியூ யோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய அமெரிக்காவுடனான குழு ஏ போட்டியில் வென்ற இந்தியா சுப்பர்-8 சுற்றுக்குத் தகுதி பெற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

ஐ. அமெரிக்கா: 110/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: நிதிஷ் குமார் 27 (23), ஸ்டீவன் டெய்லர் 24 (30), கொரே அன்டர்சன் 15 (12), ஷட்லே வான் ஷல்க்விக் ஆ.இ 11 (10), ஆரோன் ஜோன்ஸ் 11 (22), ஹர்மீட் சிங் 10 (10) ஓட்டங்கள். பந்துவீச்சு: அர்ஷ்தீப் சிங் 4/9 [4], ஹர்திக் பாண்டியா 2/14 [4], அக்ஸர் பட்டேல் 1/25 [3], மொஹமட் சிராஜ் 0/25 [4], ஜஸ்பிரிட் பும்ரா 0/25 [4])

இந்தியா: 111/3 (18.2 ஓவ.) (துடுப்பாட்டம்: சூரியகுமார் யாதவ் ஆ.இ 50 (49), ஷிவம் டுபே ஆ.இ 31 (35), றிஷப் பண்ட் 18 (20) ஓட்டங்கள். பந்துவீச்சு: செளரஃப் நெட்ரவல்கர் 2/18 [4], அலி கான் 1/21 [3.2], ஜஸ்டீப் சிங் 0/24 [4], ஷட்லே வான் ஷல்க்விக் 0/25 [4], கொரே அன்டர்சன் 0/17 [3])

போட்டியின் நாயகன்: அர்ஷ்டீப் சிங்

இந்நிலையில், லௌடர்ஹில்லில் இன்றி வெள்ளிக்கிழமை (14) 8 மணிக்கு நடைபெறவுள்ள குழு ஏ போட்டியில் அயர்லாந்தை ஐக்கிய அமெரிக்கா எதிர்கொள்ளவுள்ளதுடன், சென். வின்சென்டில் சனிக்கிழமை (15) அதிகாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள குழு டி போட்டியில் நேபாளத்தை தென்னாபிரிக்கா எதிர்கொள்ளவுள்ளதுடன், ட்ரினிடாட்டில் சனிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ள குழு சி போட்டியில் உகண்டாவை நியூசிலாந்து எதிர்கொள்ளவுள்ளது.



# ஸ்பெயின் வீரர் அல்காரஸ் சாம்பியன்

முன்னணி வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்ட பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற்றது. இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ஜெர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவ், ஸ்பெயின் வீரர் கார்லஸ் அல்காரஸ் ஆகியோர் மோதினர்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் இரு வீரர்களும் சிறப்பாக விளையாடினர். இருப்பினும் கடைசி இரு செட்களிலும் கார்லஸ் அல்காரஸ் ஆதிக்கம் செலுத்தினார்.

இதனால் 6-3, 2-6, 5-7,6-1,6-2 என்ற செட் கணக்கில் அல்காரஸ் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார்.




# கோகிலாபுர ப்ரீமியர் லீக்

வெள்ளவத்தை - கோகிலாபுர இளைஞர் போரத்தின் ஏற்பாட்டிலும் ஐ.டி.எம்.ன்.சி(IDMNC) சர்வதேச கல்வி நிறுவனத்தின் பூரண அனுசரணையிலும் வெள்ளவத்தை குரே பாக் மைதானத்தில், கோகிலாபுர ப்ரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி மிகப் பிரமாண்டமாக ஞாயிற்றுக்கிழமை (09) இடம்பெற்றது. இப்போட்டியில் 20க்கும் மேற்பட்ட அணியினர் கலந்து கொண்டனர்.

இங்கு வெற்றிபெற்ற அணியினருக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட, IDMNC சர்வதேச கல்வி நிறுவனத்தின் தவிசாளரும், ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி.வி.ஜனகன், வெற்றி கேடயங்களையும், பணப் பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

# இந்திய பெண்கள் அணிக்கு ஏமாற்றம்

9 அணிகள் பங்கேற்றுள்ள 5ஆவது புரோ ஆக்கி லீக் தொடர் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் பிரிவுக்கான ஒரு ஆட்டத்தில் இந்தியா 2-3 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்திடம் தோல்வி அடைந்தது. ஒரு கட்டத்தில் இந்தியா 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகித்த நிலையில், கடைசி 4 நிமிடங்களில் இங்கிலாந்தின் கிரேஸ் பால்ட்சன் பெனால்டி கார்னர் வாய்ப்பை பயன்படுத்தி அடுத்தடுத்து கோல் போட்டு தங்கள் அணிக்கு வெற்றியை தேடித்தந்தார். இந்திய அணி தொடர்ச்சியாக சந்தித்த 8ஆவது தோல்வி இதுவாகும். தனது கடைசி லீக்கை முடித்து விட்ட இந்தியா மொத்தத்தில் 3 வெற்றி, 13 தோல்வி என 8 புள்ளிகளுடன் 8ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டு ஏமாற்றம் அளித்தது.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 14 ஜூன் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு -02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.